# உடுவில் கிராமம் விழாக்கோலம் பூணுகிறது தமிழரசு மாநாட்டு வேலை துரிதம்

Registered as a News paper in Ceylon வில சதம் 15

★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்:49

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தி பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் பங்குனி 18 முஹறம் 12 திங்கட்கிழமை [31-3-69

உடுவில், ஞாயிறு

இம்மாதம் மூன்றும் திகதியிலிருந்து உடுவில் கிராமம் விழாக்கோலம் பூணுகிறது. உடுவிலில் இதற்குமுன் என்றும் நடைபெருதவாறு இவ்விழா அமையுமெனக்கருதப்படுகிறது. இங்கு தமிழரசுக் கட்சி மாநாட்டுக்கான வேலைகள் யாவும் துரிதமாக நடைபெறுகின்றன.

வருடா வருடம் இசைப் புலவர் திரு. என். சண்முகரத்தினத்தினல் நடாத்தப்படும் சங்கீத இசை விழா இம்மாதம் 3,4,5-ம் திகதிகளில் இதே இடத்தில் நடைபெறவிருக்கின்றது. இந்த இசைவிழாவில் இன்னிசை. நடனம், நாடகம் ஆகியனவும் இடம்பெறும்.

தமிழரசு மகாநாட்டின் ஒரு அங்கமான விவசாயக் கண்காட்சிச்சாலை இணுவில சந்தை மைதானத்தில அமைக்கப்படவிருக்கின்றது. இவ்விவசாய கண்காட்சியில கலந்துகொள்வதற்குப் பல விவசாயிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றனவென்றும் இம்மகாநாட்டின் போது வெளியிடப்படவிருக்கும் 'மகாநாட்டுமலர்' சஞ்சிகை அச்சடிக்கப்பட்டு முடிவடைந்து விட்டதென்றும் கூறப்பட்டது.

மகாநாடு நடைபெறும் கிராமசபை திறந்தவெளியரங்கிலிருந்து விவசாயக் கண்காட்சி நடைபெறும் இணுவில சந்தை மைதானம்வரை தெருவின் இரு மருங்கிலும் வாழை தோரணங்கள் கட்டப்படவிருக்கிறது.

மகாநாட்டில கலந்துகொள்ள வெளியிடங்களிலிருந்து வருவோர்களுக்கு கீரிமலையிலுள்ள வைத்திலிங்கம் மடத்தில தங்குவதற்கு ஒழுங்குளும், சாப்பாட்டு, சுகாதார வசதிகளும்செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மகாநாட்டில கலந்துகொள்வோர் பிரயாணம்செய்வதற்குப் பஸ் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

## பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் இன்று மீண்டும் ஆலயப்பிரவேச முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இன்று நடைபெறவிருக்கும் ஆலயப் பிரவேச முயற்சியில் சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்த சிலரும் கலந்துகெள்வார்கள் என முன்னணி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்களான திரு. எம். சி. சுப்பிரமணியம் திரு. ஜி. நல்லையா ஆகியோர் சிலதினங்களுக்கு முன் சாவகச்சேரி பகுதியிலுள்ள சிறுபான்மை தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆலயப் பிரவேசத்தில் கலந்துகொள்வதில்லையெனத் தீர்மானித்த தென்மராட்சி சிறுபான்மைத் தமிழ் வாலிபர்களில் சிலரும் தற்பொழுது ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவளிகக முன்வந்திருப்பதாகவும் அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

கடந்த இரு திங்கட்கிழமையும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நடந்த ஆலயப்பிரவேச முயற்சியில சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தீண்டாமை இயக்க வெகுஜன இயக்கத்தினர் மட்டுமே கலந்துகொண்டனர். முதல கிழமை புரட்சிவாதசமசமாஜ கட்சி ஆதிக்கத்திலுள்ள புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலரும் கலந்துகொண்டதாக புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த திரு. எம். பொன்னையா தெரிவித்திருந்தார்.


**ஆலோசனை கூட்டம்**

தென்மராட்சிப் பகுதியில் ஏடு படிப்பவர்கள் இவ்வருடம் படிக்கவில்லையென்றும் வழக்கம்போல் பூசை நடந்தால்தான் தாங்கள் ஏடு படிப்பார்கள் என ஒரு ஏடுபடிப்பவர் ஒருவர் தெரிவித்தார்.

கோவில் கிணற்றில் சஞ்சல், குப்பைகள் போட்டு, மடத்தை முள்கம்பி வேலியால அடைப்பதன் மூலம் இப்பிரச்னைக்கு தீர்வுகாணமுடியாதென்றும் இச் செயலகள் சிறுபான்மை சமூகத்தவரின் ஒற்றுமையைப் பலப்படுத்துமென்றும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. நாகரத்தினம் தெரிவித்தார்.

இவ்வருடம் ஒவ்வொரு கோவிலகளிலும் வருடாந்த உற்சவ களின்போது ஆலயப்பிரவேசமுயற்சி நடைபெறுமென்றும் திரு. நாகரத்தினம் மேலும் தெரிவித்தார்.

ஏப்ரல் 7-ம் திகதியுடன் வருடாந்தஉற்சவம் முடிவடைகிறதென்றும் ஏப்ரல 8-ம் திகதிக்கு பின்னர் கோவிலில வழக்கம்போல பூசைகள் நடைச்பற்ருல ஆலயப்பிரவேச முயற்கி தொடர்ந்து நடக்கும் என்றும் திரு. நாகரத்தினம் கூறினர்.



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோயில் சென்ற திங்கட்கிழமை இப்படி காட்சியளித்தது.
படம்: 'ஜீவஜுவாணர்'

பன்றித்தலைச்சிஅம்மன்கோயில்

## 'கிணறும் மடமும் கோவிலுக்கு சொந்தமானது அல்ல'

### கட்டுப்படுத்தப்பட்ட பிரதேச அலுவலகம்

# பன்னிரண்டு ஊழியர்களையும் வேலை நீக்கஞ் செய்ய உத்தரவு

## உங்கள் சைக்கிள் களவு போய்விட்டதா?

### பொலிஸார் அழைக்கிருர்கள்!

யாழ்ப்பாணம், திங்கள்

உங்கள் சைக்கிள் எப்போதாவது களவு போனதா? அப்படியாஞல் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்குச் செல்லுங்கள்.

சைக்கிள் களவிடுவதில் கைதேர்ந்த ஒருவரைக் கைது செய்ததைத் தொடர்ந்து DN 78560; DV 51477; AD 63784; 164718 ஆகிய இலக்கமுடைய நான்கு சைக்கிள்களைப் பொலிசார் அவரிடமிருந்து மீட்டுள்ளனர்.

இதுமாத்திரமின்றி வேறு சில சைக்கிள்களின் உதிரிப் பாகங்களையும் பொலிசார் மீட்டு பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

சொந்தக்காரர்கள் யாரென கண்டுபிடிக்கப்படாது இருக்கும் இச்சைக்கிள்களின் உரிமையாளர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வந்து சைக்கிள்களை மீட்டுச் செல்லுமாறு பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கா. நி.)

## யாழ். அரசாங்க அதிபருக்கு திறைசேரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

**வடபகுதி கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பொருட்கள் விநியோகிப்பதை கண்காணிக்க அமைக்கப்பட்ட தனி அலுவலகத்தை உடனடியாகக் கலைத்து அதில் கடமையாற்றும் 12 ஊழியர்களையும் வேலையிலிருந்து நீக்குமாறு திறைசேரி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள இப்பிரிவில் 12 தற்காலிக ஊழியர்களும், 4 லிகிதர்களும் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனல் இந்த அலுவலகம் இன்று ஒரு 'பியோனுடனும்' ஒரு லிகிதருடனுமே இயங்கிவருகின்றது.

வடபகுதியில் கோவளம் முனையிலிருந்து சுண்டிக்குளம்வரை 5 மைல் உள்பட்ட கடற்கரைப் பிரதேசம் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தனிஅலுவலகம் அமைக்கப்பட்டது.

இதில கடமையாற்ற தெரியப்பட்ட 12 தற்காலிக ஊழியர்களையும் வேலைநீக்கஞ் செய்யுமாறு உள்நாட்டு அமைச்சின் உத்தரவு கிடைத்தாலே இவர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

## முடிவை மாற்றுவதற்கு எம். பி. மறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து மீட்டுள்ளனர்.

இதுமாத்திரமின்றி வேறு ... னர். (கா. நி.)

தர்களும் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இந்த அலுவலகம் இன்று ஒரு 'பியோனுடனும்' ஒரு லிகிதருடனுமே இயங்கிவருகின்றது.

...மாக பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தனிஅலுவலகம் அமைக்கப்பட்டது.

இதில கடமையாற்ற தெரி...

...வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

...புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலரும் கலந்து கொண்டதாக புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த திரு. எம். பொன்னையா தெரிவித்திருந்தார்.

**ஆலோசனை கூட்டம்**

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழ் வாலிபர்கள் நேற்று மந்துவில தியாகி இரத்தினம் வாசிகசாலையில கூடி ஆலயப் பிரவேசம் பற்றி நீண்டநேரம் ஆலோசனை செய்தனர். இக்கூட்டத்திற்கு சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களான திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஜி. நல்லையா ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மே மாதம் நடைபெறவிருக்கும். வரணி, சுட்டிபுரம் அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தின்போது, ஆலயத்தை சகலருக்கும் திறந்து விடும்படி கோவில் மனேஜரைக் கோரவேண்டுமென இக்கூட்டத்தில் சிலர் கருத்துத் தெரிவித்ததாக அறியப்படுகிறது. கோவில் மனேஜரையும் திருவிழா உபயகாரரையும் தனித் தனியேசந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

தென்மராட்சியிலுள்ள மற்றும் பிரதான கோயில்கள் பற்றியும்ஆலோசிக்கப்பட்டதாகவும் மட்டுவில்பன்றித்தலைச்சிஅம்மன் கோவில் நிலைமைபற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு பிரமுகர் தெரிவித்தார்.

**தொடர்ந்து முயற்சி**

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில தொடர்ந்து ஆலயப்பிரவேசம் செய்யமுயற்சிப்போம்என்று தீண்டாமைஒழிப்புவெகுஜன இயக்க தென்மராட்சி கிளை தலைவர் திரு. கே. சுப்பையா தெரிவித்தார்.

உற்சவ நாட்களில மட்டுமன்றி, மற்றும் நாட்களிலும் ஆலயப்பிரவேசம் செய்ய தொடர்ந்து முயற்சிப்போம் என்றும் திரு. சுப்பையா மேலும் தெரிவித்தார்.

எவ்வளவு தூரம் அடக்குமுறை இடம் பெறுகிறதோ அவ்வளவுதூரம் நமது இயக்கம் வளர்ச்சியடையுமென்றும் அவர் தெரிவித்தார்.

வருடந்தோறும் கோவி...

---

நுட்பவேலைகள்சம்பந்தமாக பயிற்சியளிக்கப்பட வேண்டுமென காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா தமது அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

---

திங்கட்கிழமை இப்படி காட்சியளித்தது.

படம்: 'ஜீவனுவாணர்'

# முடிவை மாற்றுவதற்கு எம். பி. மறுப்பு

யாழ்ப்பாணம். திங்கள்

அடுத்ததேர்தலில போட்டியிடுவதில்லையென நான் எடுத்த முடிவை மாற்றுவதற்கில்லையென சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தம்மை சந்தித்த தூதுகோஷ்டியிடம் தெரிவித்ததாக தெரிய வருகிறது.

திரு நவரத்தினத்தை அடுத்த தேர்தலில் போட்டியிடுமாறு வற்புறுத்தும் பொருட்டு சாவகச்சேரியை சேர்ந்த பிரமுகர்கள்கோஷ்டியொன்று திரு சி. வைத்திலிங்கம் தலைமையில் நேற்று சந்தித்தது.

திரு நவரத்தினம் போட்டியிட வேண்டிய அவசியம் பற்றியும் சாவகச்சேரிமக்களின் விருப்பத்தையும் தூதுகோஷ்டி எடுத்துக் கூறியதாக அறியப்படுகிறது.

தான் மீண்டும் தேர்தலில போட்டியிடாத காரணம்பற்றி நீண்டநேரம் திரு நவரத்தினம் தூது கோஷ்டியிடம் விளக்கி கூறியதாகவும் தெரியவருகிறது.

## பாரதப் பிரதமர் பர்மாவிலிருந்து திரும்பினர்

புதுடிலலி, மார்ச் 30

பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று பிற்பகலுக்குச் சற்று முன்னதாக தமது பர்மா விஜயத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி வந்து சேர்ந்தார். வரும் வழியில் கல்கத்தாவிலும் 40 நிமிட நேரம் வரை தங்கியிருந்தார். கல்கத்தா விமான நிலையத்தில் ஸ்ரீமதி இந்திரா காந்தியை மேற்கு வங்காள முதலமைச்சர் உட்பட பல அரசியல பிரமுகர்கள் வரவேற்றனர்

பர்மாவிலுள்ள பாரதப் பிரஜைகள் குறித்துப் பர்மாவும் பாரதமும் விரைவில பேச்சுவார்த்தைகள் நடத்த ஒப்புக் கொண்டிருப்பதாக ஸ்ரீமதி இந்திரா புதுடிலலி வந்து சேர்ந்ததும் ...கவல தெரிவித்தார்.

பர்மாவில ஜெனரல நிவினுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமைந்துள்ளதாக இந்திரா தெரிவித்தார்.

பாகிஸ்தானில்

## ராணுவச் சட்டத்தை மீறிய 31 பேர் கைது

கராச்சி, மார்ச் 30

கிழக்கு பாகிஸ்தானில் ராணுவச் சட்டத்தை மீறியதாக 4 தொழிலாளர் தலைவர்கள் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ராணுவச் சட்டம் பாகிஸ்தானில் அமுலாக்கப்பட்ட பின்னர், முதல் தடவையாக கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரம் இன்றுதான் முதல் தடவையாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. இவர்கள் மீதான வழக்குகள் ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. ரயில் வண்டியொன்றிலிருந்து 10 பேர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**மே. பாகிஸ்தானில்**

மேற்கு பாகிஸ்தானில் மூடப்பட்டிருந்த 3 பல்கலைக்கழகங்கள் இதர பாடசாலைகள் நாளை திறக்கப்படுகின்றன. மூடப்பட்டிருந்த காலத்துக்கு மாணவர்களிடம் பணம் வசூலிப்பதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

### "நாச்சிமார் கோவிலை திறந்துவிடுக"

யாழ்ப்பாணம், திங்கள்

நலலூர், வண்ணை சிவன், நயினை நாகபூசனி, செலவச்சந்நிதி ஆகிய ஆலயங்களைப் பின்பற்றி யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் நாச்சிமார் கோவிலையும் சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களுக்கு எதிர்வரும் உற்சவத்துடன் திறந்து விடும்படி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பார்வதிபலாத்கார வழக்கில் எதிரிஇன்ஸ்பெக்டர்விடுதலை

யாழ்ப்பாணம் திங்கள்

பார்வதி பலாத்கார வழக்கில எதிரியான முன்னாள் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. ஒஸ்கார் பெரேரா நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.

வவனியாவைச் சேர்ந்த 19 வயது இளம் பெண் பார்வதியை பலாத்காரம் செய்ததாக பெரேரா மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்டிருந்தஇவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில நீதியரசர் திரு. ஓ. எல. டி. கிரெட்சர் முன்னிலையில கடந்த இரு தினங்களாக விசாரணை செய்யப்பட்டுவந்தது. விசாரணையின்முடிவில, ஜூரிமார் ஐந்து இரண்டாகம் பிரிந்து தங்கள்கருத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரியை விடுதலை செய்து நீதியரசர்தீர்ப்பளித்தார். பிற்பகல3-45க்கு தீர்ப்பு வழங்கப்பட்டது.

### ரோட்டரி கிளப் புதிய தலைவர்

கோட்டை, ஞாயிறு.

'இலங்கை பிறின்ரேஸ்' லிமிட்டெட்டின் அதிபர் திரு ரத்தினநாதர் கொழும்பு ரோட்டரி கிளப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். உதவி அதிபராக டொனட் விஜேவர்த்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## கள்ளக்கடத்தலை பிடித்து கொடுப்போருக்கு வெகுமதி

### அரசாங்கம் முடிவு

கோட்டை, ஞாயிறு

கள்ளக்கடத்தலில ஈடுபடுபவர்களைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு அரசாங்கம் பெரும் வெகுமதியளிக்கத் தீர்மானித்துள்ளது. கள்ளக்கடத்தலைப்பிடித்துக்கொடுப்போருக்கு குறிப்பிட்ட கள்ளக்கடத்தலில சம்பந்தப்பட்ட பொருள்களின் பெறுமதியையும் அதனோடு சேர்த்து அவர்களுக்கு விதிக்கப்படும் குற்றம் முதலியனவும் சேர்த்து வெகுமதியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்கடத்தலை முற்றாக நீக்குவதற்கே மந்திரிசபை இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இந்த வெகுமதிமூலம்பெறும் பணத்திற்கு சாதாரணமானவர்களுக்காயினும் சரி அதிகாரிகளுக்காயினுஞ்சரி வரி விதிவிலக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாரதப்பிரதமரின் 'ஜயராஜா' இலங்கை வந்து விட்டது

கோட்டை, ஞாயிறு

பாரதப்பிரதமர் இலங்கைக்கு அன்பளிப்பாகக் கொடுத்த 'ஜய ராஜா' என்னும் யானை சனிக்கிழமையன்று 'விஷ்ணு கலயாண்' என்னும் கப்பலில எலிசபெத்இறங்குதுறைமுகத்தில் வந்திறங்கியது.

1967-ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபாரதப்பிரதமர் இந்திராகாந்தி கண்டியிலஉள்ளதலதாமாளிகைக்கு இந்த யானையைஅன்பளிப்பாகத் தருவதாகக் கூறிச்சென்றிருந்தார். கப்பலில 4 நாட்கள் பிரயாணஞ்செய்த 'ஜயராஜா'வின்களைப்பைப் போக்க தெகிவளை மிருகக் காட்சிசாலையில அது விடப்பட்டுள்ளது.

## புதுப்புது டிசைன்களை பாவியுங்கள்

### மந்திரி வற்புறுத்தல்

வென்னப்புவ ஞாயிறு

"இன்று இலங்கையின் ஜவுளிக் கைத்தொழில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது இதே ரீதியில் இத்தொழில் மேலும் வளர்ச்சியடையுமானால வெகு விரைவில நாம் சுயதேவையை பூர்த்தி செய்துவிடலாம்" இவ்வாறு நாத்தாண்டிய தொகுதியில ஜவுளி அச்சடிப்பு நிலையமொன்றை திறந்து வைத்துப் பேசிய வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். அவர் மேலும் உரை நிகழ்த்துகையில ஒரே விதமான 'டிசைன்களையே' திருபத்திரும்ப பயன் படுத்தாமல புதுப்புது 'டிசைன்களை' பிரயோகித்தால் ஜவுளிகளை விற்பனை செய்வது சுலபம் எனக் கூறினர்.

## பயிர்ச்செய்கை பாதிப்பு இல்லை

கோட்டை, ஞாயிறு

வரண்ட பிரதேசத்தில கடும்வரட்சிநிலவிய போதும் 1968-69ம் ஆண்டு பெரும்போகப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்படவில்லை. நீர்ப்பாசன கால்வாய்கள் திருத்தியமைக்கப்பட்டு விவசாயத்துக்குத் தொடர்ச்சியாக நீர்கொடுக்காமல், புதுமுறையைக் கையாண்டு இடையிடையே நீர் வழங்கியதுமே இதற்குக் காரணம் எனக்கூறப்படுகிறது.

இவ்வருடம் குடியேற்றத் திட்டங்களிலுள்ள 44,000 ஏக்கர் நிலத்துக்கு நீர் விநியோகிக்க நீர்ப்பாசன இலாகா திட்டமிட்டுள்ளது. இந்த வருட பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பமாவதற்கு முன்னர் குடியேற்ற அதிகாரிகள் யாவருக்கும் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட விஸ்தரிப்பு தொழில்

பன்றித்தலைச்சிஅம்மன்கோயில்

## 'கிணறும் மடமும் கோவிலுக்கு சொந்தமானது அல்ல'

### பரிபாலன குழு தலைவர் கூறுகிறர்

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள கிணறும் மடமும் கோவிலுக்குச் சொந்தமானதல்ல. கிணறு அசுத்தப்பட்டிருப்பதற்கும், மடம் முட்கம்பியினல் அடைக்கப்பட்டிருப்பதற்கும் கோவில் பரிபாலன குழு பொறுப்பல்ல.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பரிபாலனக் குழுத் தலைவர் திரு. கே. கதிர்காமசேகர் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கதிர்காமசேகரர் மேலும் கூறியதாவது:

கிணறும் மடமும் இருக்கும் காணி ஒரு காரியாதிகாரிக்கு உரியது. அக்காணியில் சில அடியார்கள் கிணற்றையும் மடத்தையும் கட்டினர்கள். கோவில் பணத்தில மடமோ கிணறோ கட்டப்படவில்லை. ஆதலால் கோவில் பரிபாலன குழு கிணற்றிற்கும் மடத்திற்கு பொறுப்பலல.

இம்மாதம் 7-ந திகதிக்குப் பின்னர்தான் கோவில் மனேஜர் குழந்தைவேலுவை சந்திக்கவிலலையென்றும், அவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை தீண்டாமை வெகுஜன இயக்கத்தினர் மட்டுவில பன்றித்தலைச்சி அம்மன் கோவில ஆலயப்பிரவேசத்திற்கு சென்றிருந்த சமயம் கிணறு அசுத்தப்பட்டும், மடம் முட்கம்பியால அடைக்கப்பட்டும் இருந்தது தெரிந்ததே.

## 'நாங்களும் சேர்ந்து கொள்வோம்' என்கிறர் இவர்

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இன்று நடைபெறவிருக்கும் ஆலயப் பிரவேச முயற்சியில், புரட்சிவாத சமசமாஜ. கட்சி ஆதிக்கத்திலுள்ள புரட்சி கர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 100 பேர் கலந்து கொள்வார்கள்.

புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பாளர் திரு. எம். பொன்னையா மேற்கண்ட தகவலை நேற்று மாலை தெரிவித்தார்.

திரு. பொன்னையா மேலும் கூறியதாவது:- மாவிட்டபுரத்தில் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலர்தான் ஆலயப் பிரவேசம் செய்தார்கள். மட்டுவிலிலும் நாளை நாங்கள் ஆலயப் பிரவசம் செய்தே தீருவோம்.

நாளை காலை 10 மணிக்கு 100 பேர்கள் கொண்ட குழு ஒன்று மட்டுவில் அம்மன் கோவிலுக்கு சென்று ஆலயப்பிரவேசம் செய்யும். அல்வாய் பகுதியிலுள்ள சிறுபான்மை தமிழர்களும் இதற்கு ஆதரவளித்துள்ளார்கள் நாளை நடைபெறும் ஆலயப் பிரவேசத்தில் வடமராட்சியை சேர்ந்தவர்களும் கலந்து கொள்வார்கள்.

## பறி கொடுத்தனர்

உடுப்பிட்டி, ஞாயிறு

பரீட்சை எழுதச் சென்றவர்கள் தமது உடமைகளைப் பறிகொடுத்தனர். கட்டைவேலி ஞானசாமியார் கல்லூரியில் இத்திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை எழுதுவதற்காகத் தமது சைக்கிள்களைக் கல்லூரிவளவில் நிறுத்தி விட்டுப் பரீட்சை முடிந்து வந்து பார்த்த போது தமது சைக்கிள்களின் பெல், கிளிப், பல்ப் முதலிய உறுப்புக்களைக் காணுது திடுக்கிட்டனர் பரீட்சார்த்திகள். இக்கல்லூரியின் அயலிலுள்ள மாணவர்களே இத்திருட்டுக்களில் ஈடுபடுவதாகப் புகார் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தறிகள்:

பண்ணாகம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் 60'' தறிகள் ஆறும் அவற்றுக்கான சகல உபகரணங்களும் விற்கப்படும். நேரில்பார்த்து கேட்கும்ஆகக்கூடியவிலையை மனேச்சரிடம் தெரிவிக்கவும். 808

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு எதிர் ஒழுங்கையில்உள்ள மலையான் கலட்டி என்ற காணியில் 12 பரப்பு வீட்டுடன் விற்பனைக்குஇருக்கின்றது. விபரங்களுக்கு அ. வீரசிங்கம், கீரிமலை றேட், மாவிட்டபுரம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 797

உயர் ஜாதி அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆண் 125/- பெண் 100/- விபரங்கட்கு: 13/2 வேம்படிவீதி, யாழ்ப்பாணம். 806

### தேவை

எலெக்றிக் வெல்டர்:கேற்றில் செய்வதில் கூடியஅனுபவமுள்ள இளைஞர். நேரிலோ, கடிதமூலமோ எதிர்பார்க்கும் சம்பளத்தைக்குறிப்பிட்டு, 10-4-69ந் திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்கவும். K.N. இன்டஸ்றீஸ் 1ம் குறுக்குத் தெரு,வவுனியா. 803

பாடல்புத்தகங்களை யாழ் நகரில் விற்பனை செய்வதற்கு நம்பிக்கை வாய்ந்த ஒருவர் சைக்கிளுடன் உடன்தேவை. விபரங்களுக்கு: K. ரவிதாஸ், சந்திரா ஐஸ்பழக்கம்பனி, யாழ்ப்பாணம். 807

## தேவை

சமாச பேக்கறிக்கு கேக், பிஸ்கட், பாண் முதலியவை செய்வதற்கு நல்ல அனுபவம் வாய்ந்தபேக்கர்தேவை.

வயது: 25முதல் 45வரை.

சம்பளம்: ரூபா 190-00 —10-00 விசேடபடி. திறமையும் அனுபவமுமுள்ளவருக்கு இதற்கு மேலாகவும் சம்பளம் கொடுக்கப்படலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 7-4-1969.

விண்ணப்பங்கள் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் தொழில் அனுபவம்பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களுடனும் கீழ்க்காணும் முகவருக்கு அனுப்பப்படவேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்பு கோவிற்பற்று பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

பண்டத்தரிப்பு,
29-3-69. 1249


மலேஷிய கார்விபத்தில்

## யாழ்ப்பாணத்தவர் இருவர் மரணம்

சுழிபுரம், ஞாயிறு

மலேஷியாவில் ஏற்பட்ட கார்விபத்தொன்றில் இலங்கையைச் சேர்ந்த இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகத் தகவல்கிடைத்துள்ளது. விபத்தில் மாண்ட இருவரும் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களென்றும், இவ்விருவரும் காரொன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் விபத்தில் சிக்கியதாயும் தெரியவருகிறது. இருவரின் சடலங்களும் அவர்களின் சொந்தஊரானசுழிபுரத்திற்குக்கொண்டுவரப்பட இருப்பதாகத்தெரிகிறது.


கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்
முரசொலி
தினசரி
விற்பனையாகின்றது!
அன்பு புத்தகசாலை
27D, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30
ரெம்பரா போயா 2-30
ஜெய்சங்கர் - எல். விஜயலக்ஷ்மி நடித்த
சபாஷ் தம்பி

ராஜா (யாழ்ப்பாணம்) 77வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ நடித்த
அனுபவி ராஜா அனுபவி

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - விஜயலக்ஷ்மி நடித்த

ராணி


பார்வதி பலாத்கார வழக்கு

# 'பலாத்காரசம்பவம்நடந்ததினம் நான் படம்பார்க்கச் சென்றேன்

## கணவன் விக்கிரமரத்தின சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

பலாத்காரச் சம்பவம் நடைபெற்ற தினம் நான் முதலாவது படக்காட்சிக்கு சென்றேன். வவனியாவில் முதலாவது காட்சி இரவு ஏழு மணிக்கு ஆரம்பம். இரண்டாவது காட்சி இரவு 10 மணிக்கு. எனது வீடு தியேட்டரிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். படம்பார்த்தபின் நான் வீட்டிற்குச் சென்றேன்.

பார்வதி பலாத்கார வழக்கில் எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணைசெய்த போது சாட்சியமளித்த பார்வதியின் கணவன் விக்கிரமரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் மூன்றாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1967-ம் ஆண்டு மார்ச் 27-ம் திகதி வவனியாவில் 19 வயதான பார்வதியை பலாத்காரம் செய்ததாக இன்ஸ்பெக்டர் ஒஸ்கா பெரேரா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் சாந்தி பெரேரா, புறக்டர் கே. ராமச்சந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எம். குகராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணத்திலகா ஆஜரானார்.

விசாரணையைப் பார்ப்பதற்குக் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

எதிரியின் வழக்கறிஞரான சாந்தி பெரேரா, பார்வதியின் கணவனான விக்கிரமரத்னவை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: விமான நிலையத்தில் இருட்டாக இருந்தபடியால் எதிரியை அடையாளம் காணவில்லை?

— அவ்வளவு இருட்டல்ல.

வழ: நிலவு வெளிச்சம் அதிகம் இல்லை?- ஆம்.

வழ: சம்பவம் நடந்த தினம் பௌர்ணமி வந்த இரண்டாம்நாள்?- எனக்குத் தெரியாது.

வழ: அந்தத்தினம் பௌர்ணமி வந்து இரண்டு, மூன்று நாட்களாக இருந்திருந்தால் எதிரியை அடையாளம்

வழ: உமது வீடு தியேட்டருக்கு அருகில்?- ஒரு மைலுக்கு அதிகம்.

வழ: பொலிஸ் நிலையத்திற்குப் போய் ஜீப்பில் ஏற 15 நிமிடம் சென்றிருக்கும்? -கொஞ்சம் கூட.

வழ: மாமியை இறக்கிவிட்டபின் எதிரியுடன் பேச சந்தர்ப்பமில்லை; ஏனெனில் விமான நிலையம் கிட்ட என்று கூறினீர்?- ஆம். எதிரி மனைவியைக் கொண்டு போனபோது உயர் அதிகாரிக்குக் கூறப்போவதாகச் சொன்னேன். அந்த நேரம் உயர் அதிகாரி யார் என்று எனக்குத் தெரியாது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## மரண தண்டனையை நீக்குவதற்கு பிரேரணை

கோட்டை, ஞாயிறு

மரணதண்டனையை நீக்க வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றை ஹபறதுவ எம். பி. திரு. பிறின்ஸ் குணசேகரா ஆட்சிமன்றத்தில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

'பழிக்குப்பழி வாங்குதல்' என்ற ரீதியில் பண்பற்ற கொள்கையை விட்டு மரண தண்டனையை நீக்குமாறு அவர் தமது பிரேரணையில் தெரிவித்திருக்கிறார். மரண தண்டனையானது மனிதத் தன்மையற்ற பண்பற்று, சீலமற்ற, தருமத்துக்கொவ்வாத ஒரு தண்டனையெனக் கூறிஅதை நீக்கிவிடவேண்டுமென அவர் கோருகிறார்.

பெரிய பெரிய கல்லூரிகளில் வருடாந்த கிரிக்கெட் விளையாட்டு போட்டி நடைபெறும் எல்லா நாட்களையும் அரசாங்க, வங்கி விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்றையும் திரு. பிறின்ஸ் குணசேகரா கொடுத்துள்ளார்.

## பொலிஸார் தயாரிக்கும் புதிய பட்டியல்

யாழ்ப்பாணம், திங்கள்

ஓய்வுபெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள், சார்ஜண்டுகள், சப் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் பற்றிய பூரண விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதில் பொலிஸ் இலாகா தன் கவனத்தைத் திருப்பியுள்ளது.

நாட்டில் அதிகரித்து வரும் களவுகள், கொள்ளைகள், பயங்கரத் திருட்டுக்கள் ஆகியனவற்றில் ஓய்வு பெற்ற பொலிசாரும் ஈடுபட்டிருப்பதாக விசாரணைகளில் துலைத்த துப்புகளைத் தொடர்ந்தே பொலிஸ் இலாகா இந்தப்பட்டியலைத் தயாரிக்க முன்வந்துள்ளது.

கிராம சேவையாளர்கள், காரியாதிகாரிகளின் உதவியுடன் இந்தப்பட்டியலைத் தயாரிக்கும் போது அவர்களது சொத்துக்கள் பற்றிய விபரங்களும் இதில் சேர்க்கப்படும் எனச் சம்பந்தப்பட்ட உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல சைக்கிள் களவுகள் சம்பந்தமாக ஓய்வு பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

## 'எம். பி. க்கள் சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும்

சட்ட [illegible] பிரேரணை

கோட்டை, ஞாயிறு வேண்டுமென்றும் இவர்

திருமலைச் செய்திகள்

## கோணேசராலயப் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நடக்குப்?

### கப்பல் தொழில் சட்டங்களில் மாற்றம்ஏற்படும்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

### பொலிஸ் வாரம்

திருக்கோணமலை பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் உபாலி விஜயரத்ன தலைமையில் இங்கு ஏப்ரல் 7-ந் திகதி முதல் 14-ந்திகதி வரை பொலிஸ் வாரம் கொண்டாடப்பட இருக்கிறது. இந்த வாரத்தின் போது கொலைக்குற்றங்கள் பற்றியும் போக்கு வரத்து முதலுதவி, பொலிஸ் வேலை ஆகியன பற்றியும் மற்றும் முன்னேற்றத்திற்கான வழிவகைகளும் பரிசீலனை செய்யப்பட இருக்கின்றன. அத்தோடு இப் பொலிஸார் நகரில் உள்ள பிரமுகர்கள் சமாதான நீதவான்கள் போன்றவர்களின் இல்லங்களுக்குச் சென்று பொதுமக்களின் உதவிகளைப் பெறும் நோக்கத்தோடு உதவி பெற இருக்கின்றனர். 11-ந் திகதிமுதல் 13-ந்திகதி வரை நகரில் பொதுமக்களிடையே சட்டவிரோத மதுபானம் பாவித்தல் சூதாடுதல் போன்ற துர்ப்பழக்கங்களை அவதானிக்கும் நோக்கத்தோடு விசேஷமான இரண்டு பொலிஸ் பிரிவுகள் நியமிக்கப்பட இருக்கின்றன.

### மீனவருக்கு வசதி

திருமலை வாழ் மீனவர்கள் தம்தொழிலுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் திருக்கோணமலை வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்ஒழுங்கு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. சில்லறை வியாபார ரீதியில் இவர்களுக்கு வேண்டிய சகலவித உபகரணங்களையும் அங்கு பெறமுடியுமாம்.

### தம்பலகமம் கி. ச. உறுப்பினர்கள்

அண்மையில் நடைபெற்ற தம்பலகமம் கிராமச் சபைத் தேர்தலில் 9 வட்டாரங்களில் முதல் நான்கு வட்டாரங்களுக்கும் அங்கத்தவர்கள் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டனர். விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்- திரு. சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை, 2 ம்வட்டாரம்- திரு தாமோதரம்பிள்ளை சற்குணராஜா, 3-ம் வட்டாரம்- திரு, முத்தையா சண்முகலிங்கம், 4-ம் வட்டாரம்- திரு. தாமோதரம்பிள்ளை செல்வராசா.

மற்றும் ஐந்து வட்டாரங்

பதருடன் கூடிய நெல்லை உணவு விவசாயத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் வாங்குவதாகவும் அதே நேரத்தில் கிழக்கு மாகாண விவசாயிகளிடமிருந்து 9 வீத பதருடன் கூடிய நெல்லைத்தான் வாங்குவதாகவும், இது நியாயமல்லவென்றும் திரு. செல்வராஜா தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார். நாடெங்கிலும் வாழும் விவசாயிகள் அனைவரையும் சமமாகப் பாவிக்குமாறுதிரு செல்வராஜா அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்,

### கப்பல் சட்டம் திருத்தப்படும்

கப்பல் தொழில் முறையில் ஏற்பட்டுள்ள துரித முன்னேற்றம் காரணமாக இலங்கை கப்பல் தொழிற் சட்டதிட்டங்கள் திருத்தி அமைக்கப்பட இருக்கின்றன. இலங்கை கப்பல் தொழிற் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் கருத்துப்படி இலங்கையில் கப்பல் தொழிலுக்காக கடல் வாகனங்கள் அதிகரிக்கப்படுத்தப்பட்டுள்ளது காரணமாக கப்பற்றொழில் சட்ட திட்டங்கள இன்றைய நிலைக்கமைந்ததாகத் திருத்தி அமைக்கப்படவிருக்கின்றன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றுவரை பெரிய பிரித்தானியாவின் கடல் சட்ட திட்டங்களே இலங்கையிலும் நடைமுறையிலிருக்கின்றன. இந்தச் சட்ட திட்டங்கள் நடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே நிர்மாணிக்கப்பட்டதென்றும் அந்த வேளையில் கடல் வாகனங்களைப் பற்றிய சிந்தனைகள் எதுவும் இலங்கைக்கு இருந்ததில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிறநாட்டு ஆலோசகர்களின்உதவியோடு இ சட்ட திட்டங்களுக்கு வேண்டிய மாற்றங்களை அமைப்பதற்கு வர்த்தக அமைச்சு முயற்சி செய்துவருகின்றது. இன்று நாட்டுக்குத் தேவையான முறையில் இந்த புதிய சட்ட திட்டத் திருத்தங்கள் உருவாக்கப்பட்டதும் அவை லண்டனில்உள்ள பொதுச் செல்வகடல் சட்ட நிர்வாகிகளின் பரிசீலனைக்கும் அங்கீகாரத்திற்கும் அனுப்பிவைக்கப்படல்வேண்டும் அதன் பின்னரே அவற்றை இங்கு சட்டமாக அமுலுக்குக் கொண்டுவரலாம் தற்போதிருக்கும் சட்டப்பிரமாணங்களின்படி தேசிய கடல்வாகனங்களிற்கூட இலங்கையின் தேசியக் கொடியைப் பறக்கவிடக்கூடாது. இதனால் இலங்கை கடல்வாகனங்களில் பிரிட்டிஷ் கொடிகளே பறக்கவிடப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்து சிலையே

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது திருமலையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் தண்ணீர்த் தாங்கி ஒன்று கட்டுவதற்கு வேலை செய்துகொண்டிருக்கையில் பூமியில் புதையுண்டு கிடந்து வெளியேற்றப்பட்ட சிலை புத்தருடைய சிலை அல்ல இந்துமதக் கடவுளரின் சிலையேயென கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதைபந்தாட்டம்

அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் யுனைட்டட் கழக வீரர்களை 6 0 என்ற முடிவுகளால் தோற்கடித்தது. திருக்கோணமலை உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் சுற்றுப் போட்டியின் இறுதிக்கட்டமாக நடைபெற்ற இப்போட்டியின் இடைவேளையின் பின்னர் இரண்டு கோல்களை அன்ரனீஸ் வீரர்களான டூனு, யேசுதாஸன் ஆகிய இருவரும் போட்டனர். இடைவேளையின் பின்னர் 4 கோல்களை நிக்கலஸ், யேசுதாஸன், டூனு ஆகியோர் திரும்பவும் அடித்து வெற்றி பெற்றனர். இப்போட்டிக்கு திரு. டக்ளஸ் ஜோசப் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

### அமைச்சருக்கு வேண்டுகோள்

கிழக்கிலங்கையில் பிடிக்கப்படும் மீன் வகைகளில் பெருந் தொகையானவை கொழும்புக்கு உடன் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் கிழக்கிலங்கையில் வாழும் மக்கள்தமது பகுதியில் பிடிக்கப்படும் மீன் உபயோகத்திற்கு பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர் எனவே கிழக்கில்பிடிக்கப்படும்மீன் பெருந்தொகையாகக் கொழும்புக்குஏற்றுமதி செய்வதை தடுக்க வேண்டும். அத்துடன் உள்ளூரில் பிடிக்கப்படும் மீன்களை மீன்பிடியாளர்கள் உள்ளூர் மக்களுக்கே விற்பனை செய்யவேண்டுமென்றுகடற்றொழில் அமைச்சரால் வற்புறுத்தப்படவேண்டுமென அகிலஇலங்கை மீன்பிடியாளர் சங்கம் கைத்தொழில கடற்றொழிலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நடித்த
அனுபவி ராஜா அனுபவி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, & 9-45
AGENT for
H. A. R. M.
(Spy Film) (Colour)


REGAL at Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
James Garner,
Sidney Poitier
in
DUEL AT DIABLO
(Adults)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - விஜயலக்ஷ்மி
நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Mickey Hargilay,
Lucia Paoli
in
7 GOLDEN
WOMEN AGAINST
TWO 07

2-வது ஜனத்திரள் வாரம்
கெப்பிட்டல் பிளாஸா ஸ்ரீ கிருஷ்ணா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

5-வது வாரம்
வெலிங்டன் (யாழ். நகரில்)



சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

கிங்ஸ்லி
(கொழும்பு)
சிவாஜி ★ சாவித்திரி ★ தேவிகா
நடித்த
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென்கலர்)

வழ: நிலவு வெளிச்சம் அதிகம் இல்லை?- ஆம்.

வழ: சம்பவம் நடந்த தினம் பௌர்ணமி வந்து இரண்டாம்நாள்?- எனக்கு தெரியாது.

வழ: அந்தத்தினம் பௌர்ணமி வந்து இரண்டு, மூன்று நாட்களாக இருந்திருந்தால் எதிரியை அடையாளம் காணக் கஷ்டமாக இருந்திருக்காது?- நிலவு அதிக பிரகாசமல்ல.

வழ: நீர் அன்று இரவு 6-30 மணி படக்காட்சிக்குச் சென்றீர்?- ஆம்.

வழ: அடுத்த காட்சி இரவு 9 மணிக்கு?- வவுனியாவில் முதல் காட்சி இரவு 7 மணிக்குத்தான் ஆரம்பமாகும்.

வழ: அடுத்த காட்சி 10 மணிக்கு?- ஆம்.

## கஷ்டம் நீங்கியது

துணுக்காய், ஞாயிறு

துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் சில்லறை விற்பனை நிலையம் ஒன்றை மல்லாவியில் ஆரம்பித்துள்ளதால் இதுவரை இப்பகுதியில் இருந்துவந்த கஷ்டங்கள் ஓரளவு நீங்கியுள்ளது எனக்கூறப்படுகிறது. தனிப்பட்ட வியாபாரிகள் முன்னர் விலையைக் கூட்டி விற்ருர்களாயினும் இப்போது விலையைக் குறைத்துள்ளார்களாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 31—3—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 வீணை — சுந்தரலட்சுமி செல்வராசா, 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குரல்வகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சிறுகதை, 9-45 சதாப்பிரசங்கம்.

இலாகா இந்தப்பட்டியலைத் பிடத்தக்கதாகும். (கா.நி)

# 'எம். பி. க்கள் சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும்

## சட்டம் கொண்டுவர பிரேரணை

கோட்டை, ஞாயிறு

ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறும் சட்டமொன்றை உடனடியாக இயற்ற வேண்டுமென்று ஆட்சிமன்றத்தில் கோரும் பிரேரணையொன்றுக்கு திரு. பிறின்ஸ் குணசேகரா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

ஊழல், சுயநலம், முறைகேடு ஆகியவற்றை முற்றிலுமழித்து ஒழுக்கநிலையை மேம்படச் செய்வதற்கு இச்சட்டம் வழிவகுக்குமென அவர் கருதுகிருராம்.

ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அவர்களது பதவிக் காலத்தில் முடிக்குரிய காணியை பராதீனத்தின் கீழோ அல்லது வேறு எவ்வழியிலோ எடுத்திருந்தால், அவற்றை உடனடியாக அரசாங்கம் திருப்பி எடுக்க வேண்டுமென்றும் இவர் பிரேரணையில் தெரிவித்துளளார்

## பறவைக் காவடி

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று பகல் 12 மணியளவில் பறவைக்காவடியும், பூந்தழல் குளிப்பும் நடைபெறவிருக்கிறது.

## மலேரியா குறைகிறது

கோட்டை, ஞாயிறு

இலங்கையில மலேரியா நோய் பரவுவது ஓரளவு தடுக்கப்பட்டுள்ளதாகவும் சென்ற டிசம்பர் மாதத்திலிருந்து இந்நோய் குறைந்து வருவதற்கான அறிகுறி தென்படுவதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

## கலகத்தை தூண்ட முயல்கிருர்கள்

றக்கானை, சனி

'தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரே தேசிய ஒற்றுமை நாட்டில் ஏற்பட்டது ஆனல் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா போன்ற தீவிரவாதிகள் கலகத்தை விளைவிக்க முயல்கிருர்கள். மீண்டும் இனவெறுப்பு தலைதூக்குமானல் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் பாதிக்கப்படும். எனவே சிங்களவர், தமிழர் ஆகிய இரு சாரார்களுக்குமிடையே ஒற்றுமை நிலவ வேண்டும்.'

மசிமுல்லைத் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் றக்வானை மாவட்ட பிரதிநிதி திரு. எஸ். மாரிமுத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. அஸீஸ் தோட்டத் தொழிலாளர்களுக்காகக் கண்ணீர் விட்டாலும், அவர் 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் தாயகம் திரும்ப வேண்டுமென்று கூறும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவின் ஆதரவாளர் என்பதை நாம் மறக்கக்கூடாது.

செய்யப்பட்டனர். விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்- திரு. சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை, 2 ம்வட்டாரம்- திரு தாமோதரம்பிள்ளை சற்குணராஜா, 3-ம் வட்டாரம்- திரு, முத்தையா சண்முகலிங்கம், 4-ம் வட்டாரம்- திரு. தாமோதரம்பிள்ளை செல்வராசா.

மற்றும் ஐந்து வட்டாரங்களிலும் பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

5-ம் வட்டாரம்- திரு. கே. மீராசாய்பு, 6-ம்வட்டாரம்- திரு. என். முத்துராசா, 7-ம் வட்டாரம்- திரு. ஈ. தியாகராஜா, 8-ம்வட்டாரம்-திரு. எம். சித்திரவேல், 9-ம்வட்டாரம்- திரு. எஸ். கனகரெட்ணம்.

## நெல் கொள்வனவில் பாரபட்சமா?

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்வதில் அரசாங்கம் கிழக்கு மாகாண விவசாயிகளுக்குப் பாரபட்சம் காட்டுகின்றதா? மேற்கண்ட கேள்வியை, உணவு விவசாய அமைச்சருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில்திருக்கோணமலை மாவட்ட விவசாயக் குழு உறுப்பினரான வழக்கறிஞர் எம். கே. செல்வராஜா குறிப்பிட்டுள்ளார். ஏனைய மாகாணங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து 12வித

செய்துவருகின்றது. இன்று நாட்டுக்குத் தேவையான முறையில் இந்த புதிய சட்டதிட்டத் திருத்தங்கள் உருவாக்கப்பட்டதும் அவை லண்டனில்உள்ள பொதுச் செல்வகடல் சட்ட நிர்வாகிகளின் பரிசீலனைக்கும் அங்கீகாரத்திற்கும் அனுப்பிவைக்கப்படல்வேண்டும் அதன் பின்னரே அவற்றை இங்கு

ளூரில் பிடிக்கப்படும் மீன்களை மீன்பிடியாளர்கள் உள்ளூர் மக்களுக்கே விற்பனை செய்யவேண்டுமென்றுகடற்தொழில் அமைச்சரால் வற்புறுத்தப்படவேண்டு மென அகிலஇலங்கை மீன்பிடியாளர் சங்கம் கைத்தொழில கடற்ருெழிலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில குறிப்பிட்டுள்ளது.

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் தனபாலசிங்கம்
(கட்டிட நிர்மாண சிற்பி - லண்டன்)
மணமகள் : செல்வி செல்வதி
இடம் : தொண்டமனறு செல்வச்சந்நிதி கோவில்
காலம் ; பங்குனி 20-ம் நாள் (2-4-69)
புதன்கிழமை காலை 11 மணி முதல் 12 மணி வரை
வரவேற்புஉபசாரம்: மணமகள்இல்லத்தில் பகல் 1மணி முதல் 3 மணி வரை
தேநீர் விருந்து: மணமகன்இல்லத்தில் பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரை

உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்புகள் இல்லாததால் தயவுசெய்து இவ்வழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவும்.

திரு, ச. சு. சரவணமுத்து
[முன்னாள் பிரதம பண்டகசாலை பொறுப்பாளர்]
திருமதி சரவணமுத்து
மணமகனின் பெற்ருேர்
கொடிகாமம்.

திரு. சி. தர்மலிங்கம்
[அளப்பனவு கந்தோர் பிரதம படப் பொறுப்பாளர்]
திருமதி தர்மலிங்கம்
மணமகளின் பெற்ருேர்
வதிரி - கரவெட்டி.

1241

கொழும்பு ஸ்ருடியோவின்
30வது ஆண்டு விழா
இடம்: யாழ். திறந்தவெளியரங்கம்
காலம்: 1-4-69 செவ்வாய்க்கிழமை
மாலை 6-30 மணிக்கு
நிகழ்ச்சி நிரல்:
6-30—7-30 கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசை.
7-35—8-00 தலைமையுரையும், சொற்பொழிவும்.
8-05—8-50 ராஜ் நகைச்சுவை நாடகமன்றத்தின் நாடகம்.
8-55 9-15 பரிசளிப்பு.
9-20—10-00 செல்வி லீலா நாராயணனின் நடனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எல்லையில் தொடர்ந்து ஆத்திரமூட்ட வேண்டாம்'

## சீனவுக்கு ரஷ்யா மீண்டும் எச்சரிக்கை

ஹங்காங், மார்ச் 30

சோவியத் எல்லையில் சீனர்கள் தொடர்ந்து வாலாட்டினல் தக்கமுறையில் பதிலளிக்கப்படுவர் என்று ரஷ்யா சீன அரசுக்கு அறிவுறுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நேற்று மாஸ்கோவிலுள்ள சீனத்தூதரகத்திடம் கையளிக்கப்பட்ட ஒரு குறிப்பில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

சோவியத் எல்லையில் தொடர்ந்தும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில்இறங்கவேண்டாமென்றும் எந்தவொரு வேறுபாடும் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் ரஷ்யா சீனவுக்குத் தெரிவித்துள்ளது.

எந்தவொரு ஆத்திரமூட்டலுக்கு தக்க முறையில் பதிலளிக்கப்படும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

அதேசமயம் சர்ச்சைக்குள்ளாதியுள்ள தீவு தம்பிரதேசமே என்றும் ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையில்சீன-சோவியத் எல்லையில் சீனர்கள் தமது ராணுவ பலத்தை மேலும் இறுக்கியுள்ளனர். அப்பகுதியிலுள்ள பொது மக்கள் யாவரும் அப்புறப் படுத்தப்படுகின்றனர்.

---

## ம. பொ. சி. போராட்டத்தில் பிரிவினை வாடை

## தமிழ்நாடு சட்டசபையில் கேள்வியும் பதிலும்

சென்னை, மார்ச் 30

மா. பொ. சிவஞானம் மாநில சுயாட்சிகேட்டு போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது பற்றி தமிழ்நாடு கீழ் சட்டசபையில் பிரச்னை கிளப்பப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் பேசுகையில் இந்தப் போராட்டத்துக்கு முதல்வர் ஆதரவு தருவதாகவும் இதில் பிரிவினை வாசனை வீசுவதாகவும் குறிப்பிட்டார்.

முதல்வர் திரு. கருணநிதி பதிலளித்துப்பேசுகையில் மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் கோருவது பிரிவினை கோரிக்கையாது என்ருர்.

சபையில் நடந்த விவாதம் பின்வருமாறு:-

திரு. கருத்திருமன்: பொய் வழக்குகள் போட்டிருப்பதை 6 மாதத்திற்குள் வாபஸ்பெருவிட்டால் காந்திநூற்ருண்டுவிழாவுக்கு முன் போராட்டம் தொட...

எதிர்க்கட்சித் தலைவருக்கு வசதி செய்து கொடுக்க முன் வந்திருப்பதற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு கஷ்டத்தில் எதிர்க்கட்சி தலைவருக்கு வசதிசெய்து கொடுப்பதை மக்கள் தவருகக் கருதலாம்.

பற்ருக் குறை பட்ஜெட் இல்லாமல் நல்ல வாழ்வு மக்களுக்கு ஏற்பட்டு, சுபிட்சமாக இருந்தால் இந்த வசதிகளை ஏற்றுச் கொள்வது பற்றியோசித்து சொல்வேன்.

கருணநிதி: எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பவர்கள் எந்தக் கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று அண்ணு கூட சொல்லி இருக்கிருர். அந்த அடிப்படையில் தான் இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

கட்சித் தலைவருக்கு இந்த வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமா என்றுதான் கேட்கிறேன்.

எப்போது வேண்டுமோ அப்போது யோசித்து எடுத்துக்கொள்கிறேன்.

கருணநிதி: அண்ணு இருக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவருக்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்று அண்ணுவுக்கு கருத்திருமன் கடிதம் எழுதியிருக்கிருர். அன்று அண்ணுவுக்கு கடிதம் எழுதியவர் இன்று வசதிசெய்து கொடுத்தபின் மறுப்பது ஏன்என்று தெரியவில்லை.

கருத்திருமன்: இந்தநேரத்தில் அது தேவைதான என்பதை யோசனை செய்து ஏற்றுக்கொள்கிறேன்.

ஏ. ஆர். மாரிமுத்து (பி. சோ): எதிர்க்கட்சித் தலைவர் தனக்கு அரசு செய்துகொடுக்கும் வசதி தேவை இல்லை என்று கூறினலும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வசதி செய்து

---

## இஸ்ரேல் தாக்குதலைக் கண்டிக்கும் தீர்மானம்

### ஐ நா பாதுகாப்புசபையில் தாக்கல்

வாஷிங்டன், மார்ச் 30

இஸ்ரேலியர் அண்மையில் ஜோர்டான்மீது நடத்திய தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானமொன்றை பாகிஸ்தான், சினிகல், சாம்பியா ஆகிய நாடுகள் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்துள்ளன.

இம்மாதிரித் தாக்குதல்கள் மீண்டும் ஏற்பட்டால் பந்தோபஸ்துசபை நடவடிக்கை எடுக்குமென்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் மீது ஜோர்டான் பிரதிநிதி பேசுகையில், மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கு ஒரே வழி இஸ்ரேல்தான் பலவந்தமாக பிடித்துக்கொண்டுள்ள பகுதிகளிலிருந்து பின் வாங்குவதுதான் என்று குறிப்பிட்டார்.

சபை தேதி குறிக்காமல் ஒத்திப்போடப்பட்டது.

அண்மையில் ஜோர்டானில் மக்கள் வாழும் பிரதேசங்களில் இஸ்ரேலியர் நடாத்திய தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மூன்று பேர் நேற்று மரணமானர்கள்.

---

## மே வங்க கவர்னருக்கு மக்கள் பிரியாவிடை

### மந்திரிகள் வரவில்லை

கல்கத்தா, மார்ச் 30

மாநில அரசாங்க அமைச்சர்களுக்கும் தமக்குமிடையில் ஏற்பட்ட தகராறுகளுக்குப்பிறகு மேற்குவங்காளத்திலிருந்து விலகிப்போன கவர்னர் தர்மவீராவுக்கு மந்திரிகள் எவரும் வழியனுப்ப வரவில்லை.

ரயில்மூலம் டில்லிக்கு பயணமான தர்மவீராவுக்கு வங்கப்பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் பிரியாவிடைகொடுத்து வழியனுப்பிவைத்தார்கள்.

ரயில்வே ஸ்டேஷனில் பெருந்திரளான மக்கள் கவர்னர் அங்குவருவதற்கு முன்பே கூடிவிட்டார்கள். ஜனத்திரள் காரணமாக ரயில் வண்டி ஐந்து நிமிடம் தாமதமாகக் கிளம்பவேண்டியதாயிற்று.

ஏராளமான பொது மக்கள் தர்மவீராவுக்கு மாலைகளை அணிவித்தார்கள். 'தர்மவீரா நீடு வாழ்க' என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. கவர்னரை நேரில் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் அவர் அமர்ந்திருந்த பெட்டியின் அருகில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு சென்ருர்கள்.

'உங்களை வழியனுப்புவதற்கு எந்த மந்திரியும் வராமல் இருக்கலாம். ஆனல் மக்களின் நல்வாழ்த்துக்கள் உங்களுக்கு உண்டு என்பது உறுதி'' என்று கவர்னரின் பெட்டி அருகில் சென்ற சிலர் கூறினர்கள்.

ரயில் வண்டி கிளம்பத் தொடங்கியதும், கவர்னர் தர்மவீரா கரம்கூப்பி வணக்கம் செலுத்திஞர். ''மேற்கு வங்காளத்தை விட்டுச் செல்லுவது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. வங்கத்தை நான் என்றும் மறவேன்'' என்று அவர் கூறினர். தமது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் வங்கத்திற்கு சுபிட்சம் தரும் என்று அவர் கூறினர்

ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு சில பொலிஸ் அதிகாரிகளைத் தவிர பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் இல்லை. பிரதம காரியதரிசி எம். எம். பாஸுவும், சீனியர்ராணுவ, சிவில் அதிகாரிகளும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.

இதற்கு முன்பாக ராஜபவன் ஊழியர்கள் கவர்னருக்கு ஒருஎளிய வழியனுப்பு விழா நடத்தினர்கள். பெண்கள் அவருடைய நெற்றியில் சந்தனம் இட்டார்கள்.

---

## நாகா அங்கமி கோஷ்டி

---

இந்தியா திரும்பிய

## பர்மா அகதிகளுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

### இந்திரா முயற்சிபலிதம்

ரங்கூன், மார்ச் 30

பர்மாவில் சொத்துக்களை விடுத்து இந்தியாவுக்குத்திரும்பியுள்ள இந்தியர்களுக்கு பர்மா அரசு நஷ்ட ஈடுவழங்குவதற்கான உடன்படிக்கையொன்றுவிரைவில் உருவாகவிருப்பதாக அறியப்படுகிறது.

பர்மாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியுள்ள இந்தியர்களின் நிலைமை குறித்து பர்மிய புரட்சிக்கவுன்சில் தலைவர் நீவினுடன் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனக இந்த நிலைமை உருவாகியிருக்கின்றது.

பர்மாவிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு பர்மிய பிரஜாவுரிமை கொடுப்பதற்கும் துரிதமான நடவடிக்கை எடுக்க நீவின் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. திருமதி காந்தியின் கருத்துக்களை ஜெனரல் நீவின்மிகவும் கவனமாகக் கேட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று பர்மாவிலுள்ளஇந்தியர்கள் மத்தியில் திருமதி காந்தி பேசுகையில் நவீன நிலைமைகளுக்கேற்ப விழிப்பாய் இருக்கவேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

---

## அவர் வளர்த்த 'கேரோ'

கல்கத்தா, மார்ச்.30

தன்வினை தன்னைச்சுடும் என்ற பழமொழி மே. வங்காள மந்திரியொருவர்விஷயத்தில் பலித்தது. 1967-ல் ஐ.மு. அரசின் சுபோத் பானர்ஜி தொழிலாளர் நல இலாகா மந்திரியாயிருந்தார். கேரோவுக்கு ஊக்கமளித்தவர் அவர்தான். கேரோமந்திரி என்றே அவருக்குப் பெயர் சூட்டப்பட்டது.

இப்போது அவர் பொதுப் பணித்துறை மந்திரியாயிருக்கிருர். ஸெராம்பூரிலுள்ள ஒரு கல்லூரி முதல்வரின் அழைப்புக்கிணங்க மாணவர் கூட்டமொன்றில் பேசுவதற்காக அவர் அக் கல்லூ

---

## செய்திச் சுருக்கம்

### கம்யூ. கட்சி வாலிப மாநாடு

கம்யூனிஸ்ட்கட்சி வாலிப முன்னணியின், வருடாந்த மாநில மகாநாடுகள் அடுத்த மாதம் 2-ந் திகதி அக்குரஸ, கொழும்பு, பதுளை ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கின்றன. சைக்கிள் மரதன்ஓட்டப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளும் மாநாட்டை முன்னிட்டு நடைபெறவிருக்கின்றன.

0 0 0

### மந்திரிக்குச் சாட்டை

தேசிய அரசாங்கத்திலுள்ள சில பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் மாணவர்களை மேடைகளில் தாக்கி வருகிருர்கள். இத்தகைய பிற்போக்கான அமைச்சர்கள் கையில் அதிகாரம்இருக்கும்வரை நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது' என்று ரத்மலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய தெவிநுவரை எம்.பி. திரு, ரெனி டி மெல் தெரிவித்தார்.

0 0 0

### இன்று சாட்சியம்

கோணேஸ்வரர் ஆலயப் பிரதேசத்தை புனித நகரமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரிய மகஜரின் பேரில் விசாரணைச் சபையின்முன் இந்துசமய ஆலோசனைச் சபையினர் இன்று சாட்சியமளிப்பார்கள்.

0 0 0

### 'மினி'க்குத் தடை

மினிஸ்கேட் உடை அணிவதை நாட்டில்தடைசெய்ய வேண்டுமென அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம்

---

## டாக்டர் ஸி.பி.யின் வீடு

சென்னை மார்ச் 30

காஞ்சிபுரம் ராஜா தெருவிலுள்ள காலஞ்சென்ற டாக்டர் ஸி.பி. ராமசுவாமி ஐயரின் வீடு அவருடைய குடும்பத்தினரால் காஞ்சிபுரம் பெண்கள் பள்ளிக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் வீடு சுமார் 10 ஆண்டு காலமாக டாக்டர் ராமசுவாமி ஐயரின் குடும்பத்தினரிடம் இருந்து வந்துள்ளது. அந்த வீடு ஸி. பி. ராமசுவாமி ஐயர் ஞாபகார்த்த கட்டிடம் என அழைக்கப்படும். அப் பள்ளியில் சுமார் 1500 பெண்கள் படித்து வருகிருர்கள்.

## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், திங்கள்

முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் திரு. ஆர். நவரெத்தினம் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று நேற்றைய 'ஈழநாட்'டில் செய்தி வெளியாகியிருந்தது. பட்டின சபைத் தலைவர் திரு. ஆர். நவரெத்தினம் என்றிருப்பதை திரு, ம. சூ. வஸ்தியாம் பிள்ளைஎன்று திருத்தி வாசிக்கவும்.

---

நாங்கு தினங்கள் இங்கு தங்கி நிற்கும்.

0 0 0

### 'மே'யில் கலைக்கப்படும்

இலங்கைப் பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடர் எதிர்வரும் மே மாதப் பிற்பகுதியில் கலைக்கப்படவிருக்கின்றது. அதற்கு முன்னர் சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப் படும்.

0 0 0

### காமன் விழா

நெரியல்லைத் தோட்டம் நடுப்பிரிவு மக்கள் காமன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்கள். விழாவில் கலைநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

0 0 0

### ரயிலும் காரும் வருகின்றன

நாட்டில் உல்லாசப் பிரயாணிகள்வர்த்தகத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் உல்லாசப் பிரயாணசதை இந்த ஆண்டில் 15ரயில் 'கோச்சு'களையும் 100 கார்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினை கோரிக்கையாது என்றார்.

சபையில் நடந்த விவாதம் பின்வருமாறு:-

திரு. கருத்திருமன்: பொய் வழக்குகள் போட்டிருப்பதை 6 மாதத்திற்குள் வாபஸ்பெறாவிட்டால் காந்திநூற்றாண்டுவிழாவுக்கு முன் போராட்டம் தொடங்குவேன் என்று கூறினேன். இதற்கு முதலமைச்சர் பதில் சொல்லும்போது பொலிசார் ஒன்றும் பூப்பறித்துக்கொண்டு இருக்கமாட்டார்கள் என்றார்.

கருணாநிதி: எதிர்க்கட்சிக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டால் இந்த ஆட்சி வன்முறைக்கு இடம்கொடுக்காது என்றுதான் சொன்னேன். இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்.

கருத்திருமன்: மாநிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒன்றும் செய்யமுடியாமல் இருக்கிறீர்கள். இதற்கு மேல் மத்திய அரசுடன் தொகை கேட்பது என்ன நியாயம்? மாநில சுயஆட்சி போராட்டம் தொடங்குவேன் என்று மா. பொ. சிவஞானம் அறிவித்ததற்கு முதலமைச்சர் அதற்கு முன்னால் நானே நடத்துவேன் என்று கூறியிருக்கிறார். பிரிவினை வாசனை அடிக்கிறது.

கருணாநிதி: மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பது எப்படிப் பிரிவினையாகும்.

கருத்திருமன்: கொள்முதல் விஷயத்தில் கடடாயம் இருக்கிறது. மேலும் பல தவறுகள் நடக்கிறது. சர்க்கார் விவசாயிகளுக்கு நியாயமான விலையைக் கொடுத்து இந்த வியாபாரத்தைநடத்தவேண்டும்.

கருத்திருமன்: காவேரியில் இருந்து சென்னைக்கு தண்ணீர் வருகிறது. என்று கூறுகிறார்கள். 150கோடி ரூபாய் செலவு செய்து கிருஷ்ணா, கோதாவரி ஆற்று தண்ணீரை கொண்டுவர முயற்சித்தால் செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் பல மாவட்டங்களுக்கும் நீர்வழங்க ஏற்பாடு செய்யலாம்.

கருணாநிதி; இதுபற்றி ஆந்திர முதல்-மந்திரி தெரிவித்த யோசனையின்பேரில் அதிகாரிகள் பரிசீலனை செய்து வருகிறார்கள். அறிக்கை வந்தபிறகு அமைச்சரவை பரிசீலிக்கும்.

கருத்திருமன்: பஸ்தொழிலாளர்-மாணவர் மோதலை விசாரிக்க அமைக்கப்பட்ட சோமசுந்தரம் கமிஷன் இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. இந்தமாதம் 31 ந்தேதிக்குள் அறிக்கை சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேம்.

சார்ந்தவராக இருந்தாலும் வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று அண்ணா கூட சொல்லி இருக்கிறார். அந்த அடிப்படையில் தான் இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

கருத்திருமன்:- எதிர்க்கட்சித் தலைவருக்கு கொடுக்க முன்வந்துள்ள வசதிகளை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. அண்ணா இருக்கும்போது கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் அப்போது பற்றாக்குறை பட்ஜெட் இல்லை. இப்போது எங்கும் வரட்சி ஏற்பட்டு இருக்கிறது. பற்றாக்குறைபட்ஜெட் வேறு போட்டிருக்கிறோம் இந்த நேரத்தில் எதிர்க்

தில் அது தேவைதானா என்பதை யோசனை செய்து ஏற்றுக்கொள்கிறேன்.

ஏ. ஆர். மாரிமுத்து (பி. சோ): எதிர்க்கட்சித் தலைவர் தனக்கு அரசு செய்துகொடுக்கும் வசதி தேவை இல்லை என்று கூறினாலும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்ற சட்டத்தை நிறைவேற்றி விடுங்கள். அவர் இன்னும் 2 ஆண்டுகளுக்குக் கூட இந்த வசதிகள் வேண்டாம் என்றால் வற்புறுத்தவேண்டாம்.

கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் இந்த வசதிகளை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் எதிர்க்கட்சி தலைவருக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்ற திட்டம் சட்டமாக்கப்படும்.

# மதுவிலக்கு வெற்றிபெற மைசூர் அமைச்சர்யோசனை

## ஒரேசமயம் நாடு முழுவதும் அமுலாக்கவற்புறுத்து

பெங்களூர், மார்ச் 30

மதுவிலக்கு திட்டம் வெற்றிபெறவேண்டுமானால் ஒரே சமயத்தில் நாடு முழுவதும் அமுலாக்கப்பட வேண்டும், துண்டு துண்டாக அமுலாக்கப்படலாகாது என்று மைசூர் நிதிமந்திரி திரு. ராமகிருஷ்ணஹெக்டே கூறினார்.

ராஜ்ய அசெம்பிளியில் மான்ய கோரிக்கை மீது நடந்த விவாதத்துக்கு மந்திரி பதிலளித்தார். சில சங்கடமான உண்மைகளை உணரவேண்டும். மதுவிலக்கு என்பது உணர்ச்சி பூர்வமாகவோ அன்றி வேறுவிதமாகவோ பரிசீலிக்கக்கூடிய விஷயமல்ல. மேலும் சில வகுப்பினர் குடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டால் மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறாது என்று திரு. ஹெக்டே குறிப்பிட்டார்.

மதுவிலக்கை ரத்துசெய்வதற்கான காரணங்களை சர்க்கார் ஏற்கனவே கூறியுள்ளது. ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட குடி மீதான தடை தோற்றுவிட்டது என்று நிதிமந்திரி கூறினார். மதுபான கண்டிராக்டுகளைப் பைசல்செய்வதில் சர்க்கார் அதிகபட்ச வருமானத்தையே பிரதானமாகக் கருதியது என்றும், எக்சைஸ் துறையில் சோஷலிஸம் என்பதை சர்க்கார் நம்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

சிறிய கண்டிராக்டர்களுக்கு உதவுவது தனது கடமை என சர்க்கார் கருதவில்லையென்று திரு. ஹெக்டே குறிப்பிட்டார்.

—

பாகிஸ்தானில்

## சம்பள உயர்வு வாபஸ்

கராச்சி, மார்ச் 30

அண்மையில் பாகிஸ்தான் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வை ராணுவ ஆட்சியாளர்கள் வாபஸ்பெற்றுள்ளனர். சம்பளஉயர்வு கொடுக்கப்படுவதற்கு முன்பிருந்த விகிதத்திலேயே அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் சம்பள நிலைமை குறித்துப் பரிசீலனைசெய்வதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

—

## ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஞாயிறு

தண்ணீரூற்று பீதாம்பரம் சிவம் என்பவர் தனது கடையில் வைத்து ஒரு றாத்தல் பாணைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஒரு சதம் கூட்டி விற்றாரென்று வவுனியா உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் ஜனாப் ரி. எம். ரகுமானால் தொடரப்பட்ட வழக்கில் தாம் சுற்றவாளி என்று கூறியதைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதிபதி மேல் விசாரணையை ஆனி மாதத்துக்கு ஒத்திவைத்தார்.

பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் அவர் அமர்ந்திருந்த பெட்டியின் அருகில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு சென்றார்கள்.

'உங்களை வழியனுப்புவதற்கு எந்த மந்திரியும் வராமல் இருக்கலாம்.

## பூகம்பத்தில் 20 பேர் பலி

வண்டன், மார்ச், 30

இதியோப்பியாவில் ஏற்பட்ட ஒரு பூகம்பத்தில் 20 பேர் பலியானார்கள். 20 ஆயிரம் பேர் வீடுகளையும் உடைமைகளையும் இழந்துள்ளனர்.

## பௌத்த ஸ்தலங்கள் அபிவிருத்திக்கு

## ரூபா 20 கோடி ஒதுக்கப்படும்

புதுடில்லி, மார்ச் 30

இந்தியாவில் உள்ள பௌத்த புனித ஸ்தலங்களை அபிவிருத்திசெய்வதற்காக இந்திய அரசு 20கோடி ரூபாய் தனது நாலாவது திட்டகாலத்தில் செலவுசெய்யவிருக்கின்றது.

இத்தகவலை இந்திய உல்லாசப் பிரயாணத் துறை அமைச்சர் திரு. கரன்சிங் அறிவித்துள்ளார். பீகாரிலுள்ள பௌத்த ஸ்தலங்களுடன் விமானத் தொடர்புகள் ஏற்படுத்தவும், புத்தகாயாவில் விமான இறங்குதுறை அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

## ஐஸனேவருக்கு இறுதிமரியாதை

வாஷிங்டன், மார்ச். 30

இராஜ மரியாதையுடன் மக்கள் மரியாதை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள முன்னாள் அதிபர் ஐஸனேவரின பூதவுடலுக்கு இறுதி மரியாதை செய்வதற்காக உலகின் பலபாகங்களிலிருந்தும் தலைவர்கள் வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள். இந்திய அரசின் சார்பில் துணைப்பிரதம மந்திரி திரு. மொராஜி தேசாய் வந்திருக்கிறார்.

ஐஸனேவரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை அவரது சொந்தவூரில் அடக்கம் செய்யப்படும்.

ருக்கு ஒடுஎளிய வழியனுப்பு விழா நடத்தினார்கள். பெண்கள் அவருடைய நெற்றியில் சந்தனம் இட்டார்கள்.

—

## நாகா அங்காமி கோஷ்டி முழுவதும் பிடிபட்டது

கோஹிமா. மார்ச், 30

சீனாவிலிருந்து திரும்பியுள்ளநாகா கலகக்காரர்கள் 162 பேர் இந்திய பாதுகாப்பு படையினரிடம் பிடிபட்டனர். இவர்கள்மாவோ அங்காமி கோஷ்டியைச்சேர்ந்தவர்கள். நாகாலாந்தில் டுவான்சாங் ஜில்லாவில் உள்ள கலகக்காரர்கள் முகாம் ஒன்றில் இந்நபர்கள் பிடிபட்டனர்.

இம் முகாமை பாதுகாப்பு படையினர் சூழ்ந்து கொண்டனர்.

மாவோ அங்காமியுடன் குழு முழுதும் பிடிபட்டுவிட்டது. இன்னொரு கோஷ்டியிலுள்ள அரைப் பகுதியும் பிடிபட்டுவிட்டது.

மற்றவர்களையும் பிடித்துவிட பாதுகாப்பு படையினர் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

—

## கள் குடித்தபின் மாண்டனர்

தஞ்சாவூர், மார்ச் 30

தஞ்சை அருகிலுள்ள சாலைமங்கலம் கிராமத்தில் கள் அருந்திய பின்னர் 4 பேர் மாண்டனர். மாண்டவரில் ஒருவர் சட்டவிரோதமாகக் கள் விற்பவரும் ஆவர்.

சட்டவிரோதமாக கள் விற்றவர்பெயர் தங்கய்யா நாடார். சாலைமங்கலம்கிராமத்தைச்சேர்ந்த அண்ணாமலை வீரய்யநயினார் ஆகிய இருவருக்கும் மற்றும் கீழ் கபிஸ்தலத்திலிருந்து வந்த முருகையபடையாச்சிக்கும் அவர் கள் விற்றதாகக் கூறபடுகிறது. அந்த மூவரும் தங்களுக்கு உடம்பை என்னவோ செய்கிறது என்று சொன்னார்களாம். அதன் பேரில் தங்கையா நாடாரும் அந்த கள்ளைக் குடித்தாராம்.

சிறிது நேரத்தில் அந்த 4 பேருமே வாந்தி எடுக்கத் தொடங்கினார்கள். தஞ்சாவூர் ஆஸ்பத்திரிக்கு அவர்களை எடுத்துச் சென்றார்கள் வழியிலேயே 4பேரும் மாண்டார்கள்.

விஷம் காரணமாக மாண்டிருக்கலாம் என்று முடிவு கூறப்பட்டது. பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

ருக்குப் பெயர் சூட்டப்பட்டது.

இப்போது அவர் பொதுப் பணித்துறை மந்திரியாயிருக்கிறார். ஸெராம்பூரிலுள்ள ஒரு கல்லூரி முதல்வரின் அழைப்புக்கிணங்க மாணவர் கூட்டமொன்றில் பேசுவதற்காக அவர் அக் கல்லூரிக்குப் போயிருந்தார்.

அவர் கல்லூரிக்குள் நுழையும்போது சுமார் ஆயிரம் மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு உள்ளே போகமுடியாமல் 'கேரோ' செய்தனர்.

நக்ஸல்பாரி மாணவர்களின் வன்முறைகளை கண்டித்தே அவர்கள் இப்படிச் செய்தனர்.

கூட்டத்தில் பேசாமலே மந்திரி திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

—

## புற்பாய் நெசவுவேலை

துணுக்காய், ஞாயிறு

துணுக்காய்ப் பகுதியிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட புற்பாய் நெசவு வேலை உற்சாகமூட்டத்தக்க வகையில் வளர்ந்து வருகின்றது. கல்விளானிலும் மல்லாவியிலும் இவை செய்யப்படுகின்றன.

பாய்களின் தரத்தை உயர்த்தி உற்பத்தியாளர்களின் வருவாயையும் கூட்டுவதற்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் முயற்சி எடுத்துவருகிறார். இதில் பயிற்சியளிப்பதற்காக இவ் வேலையில் விசேஷ திறமை பெற்ற திருமதி ப. கிட்டப்பா என்னும் ஆசிரியை துணுக்காய் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

—

## 'சிறுபான்மையினர் உணரவேண்டும்'

திருக்கோணமலை, ஞாயிறு

'இலங்கையில் பெரும்பான்மை மக்களின் ஆதரவின்றி, சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தங்கள் மூலாதார உரிமைகளைப் பாதுகாக்க முடியாது. அதே வேளையில் சிறுபான்மை மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றிப்பெரும்பான்மை மக்கள் இந்த நாட்டில் ஒரு நிலையான அரசாங்கத்தை அமைக்கவும் முடியாது.'

இவ்வாறு மூதூர் தொகுதி எம். பி. ஜனாப் ஏ. எல். ஏ மஜீத் கிண்ணியா மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

இன்று சாட்சியமளிப்பார்கள்.

0 0 0

## 'மினி'க்குத் தடை

மினிஸ்கேட் உடை அணிவதை நாட்டில்தடைசெய்ய வேண்டுமென அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை கண்டி மாநகர சபை நிறைவேற்றியுள்ளது.

0 0 0

## 'பூஜி' வருகிறது

பத்தாவதுதென் சமுத்திர ஆய்வு சுற்றுலாவை மேற்கொண்டிருக்கும் ஜப்பானிய கப்பல் 'பூஜி' ஏப்ரல் மாதம் 5-ம் திகதி இலங்கைவந்து

## ரயிலும் காரும் வருகின்றன

நாட்டில் உல்லாசப் பிரயாணிகள்வர்த்தகத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் உல்லாசப் பிரயாணசபை இந்த ஆண்டில் 15ரயில் 'கோச்சு'களையும் 100 கார்களையும் வாங்கவிருக்கின்றது.

0 0 0

## இவருக்கும் அபராதம்

போதிய 'பிரேக்' இல்லாத பஸ் ஒன்றை ஓடவிட்ட குற்றத்திற்காக இ. போ. ச. தலைவருக்கு கம்பஹா நீதவான் திரு. பி. என். டீ. சில்வா 25 ரூபா அபராதம் விதித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'எது நல்லது எது தீயது என்று ஒருவன் அறிந்துவிட்டால் அதுவே ஞானமாகிவிடாது. அதனுலேயே முத்தியடையமுடியாது. புதுமை அடைந்தவன் அதனுலேயே ஞானியாகிவிட்டான்''.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 18-ந்திகதி (31-3 69)


## இன, மத ஒற்றுமை

எந்த மதத்தைச் சார்ந்தவர்களாகுலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகுலும் அவர்களுக்குரிய இடம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இன, மதவேறுபாடுகளை நீக்குவதற்கு ஒன்றுபட்ட முயற்சிசெய்யப்படுவதாகவும் இதுவே இந்தநாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் முயற்சியாக இருக்க வேண்டுமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலை பரிசளிப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலியுறுத்தியிருந்தார். அரசியல் ஆதாயத்துக்காக இன, மதவேறுபாடுகளைக் கிளப்பும் பிரிவினைச் சக்திகள் சமீபகாலத்தில் தலைதூக்கியிருப்பது துரதிருஷ்டமானதென்றும் அன்பையே போதிக்கவேண்டிய மதத்தலைவர்கள் சிலர் வேற்றுமையையும் வெறுப்பையும் போதிப்பது வெட்கமும் வேதனையுமளிப்பதென்றும் பிரதமர் கவலையோடு கூறியிருக்கிறர். தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவது கஷ்டம்; ஆனுல் அதைக் குலைப்பது சுலபம். நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஒரே சிந்தனையுடன் இந்த முயற்சியில் ஈடுபட்டால் தான் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் வெற்றிகாணமுடியும்.

இந்து கனிஷ்ட பாடசாலையில் தினமும் வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்துசமயம் சம்பந்தமாக மட்டுமல்லாமல் பிறமதங்களின் முக்கிய திருநாள்கள் பற்றியும் அந்த மதங்களின் போதனைகள்பற்றியும் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறப்படுகிறதென்றும் மற்றைய சமயங்கள்பால் மதிப்புக்கொண்டு ஒழுகுவதற்கு இது உதவுமென்றும் பாடசாலை அதிபர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இதை பிரதமரும் வெகுவாகப் பாராட்டியிருந்தார் இது பாராட்டுடன் நின்றுவிடக் கூடாது. நாட்டில் இன, மத வேறுபாடுகள் நீங்கி உண்மையான தேசிய ஐக்கியம் என்றும் இங்கு நிலைபெறவேண்டுமானுல் வருங்காலத் தலைவர்களான இன்றைய சிறுவர் உள்ளத்தில்தான் முதலில் இந்த ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவேண்டும். இதற்கு கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலை வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. நமது நாட்டுக்கேற்ற கல்வி முறை இன்னமும் உருவாக்கப்படவில்லையென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனுல் அதை உருவாக்குவதில் இன்னமும் வெற்றிகிட்டவில்லை. புதிய கல்வித்திட்டத்தில் இன, மத வேறுபாடுகளை நீக்கவும் தேசிய ஒற்றுமையை உருவாக்கவும் கூடிய அடிப்படை அம்சம் இடம் பெறவேண்டியது அவசியம்.

## மாபெரும் தலைவரின் மறைவு

மாபெரும் படைத்தளபதியாகவும், மாபெரும் நாட்டின் தலைவராகவும், தலைசிறந்த ராஜதந்திரியாகவும் விளங்கி உலக மக்கள் அனைவரின் சுதந்திரத்தையும் மதித்த ஐஸனேவர் மறைந்துவிட்டார். அவரது மறைவு அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல, மனித சுதந்திரத்தை

அடிபணியவைத்தது மட்டுமல்லாமல் அமெரிக்க அதிபராகப் பதவியேற்றபின் நிறவெறியர்களுக்கெதிராக அவர் எடுத்த துணிச்சலான நடவடிக்கைகளும் திரு. ஐஸனேவரின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் நேர்மைக்கும், விசுவாசத்திற்கும் என்றும் நினைவுச் சின்னங்களாக விளங்கும்.

# "ஆசிரியர்களின் வேலைப்பளு நாட்டையே பாதிக்கிறது"

**தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் பேராசிரியர் ஜி. பி. மலலசேகரா நுகேகொடை தமிழ்ப் பாடசாலை பரிசளிப்புவிழாவில் ஆற்றிய சொற்பொழிவின் முதற பகுதித் தொகுப்பு இது.**

**இன்றைய மாணவர் சமுதாயத்தின் பல பிரச்னைகளைப்பற்றி கல்வித் திட்டங்களினுல் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றி பேராசிரியர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நாட்டு நலனிலும், முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ள அனைவரின் சிந்தனைக்கும் சிரிய விருந்தாக அமைந்துள்ளன.**

**பேராசிரியர் ஜி. பி. மலலசேகராவின் சொற்பொழிவின் இறுதிப் பகுதி நாளை வெளியாகும்.**

— தொகுப்பு: பெரி. சுந்தரலிங்கம் —

''இன்று இலங்கையில் உள்ள சில பாடசாலைகளில் 4000க்கும் அதிகமான மாணவர்கள் படிக்கிருர்கள். ஒரே பாடசாலையில் இவ்வளவு பெருந்தொகையான மாணவர்களைச் சேர்ப்பது அவ்வளவு வரவேற்கத்தக்கதல்ல.

நான் படித்த பாடசாலையில் எங்கள் கல்லூரி அதிபருக்கு அவரது பாடசாலையில படிக்கும் ஒவ்வொரு மாணவனையும் நன்கு தெரியும். மாணவர்களைப் பற்றி மட்டுமல்லாது, மாணவனின் பெற்ருேர் பற்றியும், அவனது குடும்பப் பின்னணி பற்றியும் அவன் எந்தச் சூழலில் வளர்க்கப்பட்டவன் என்பது பற்றியும் நன்கு அறிந்திருந்தார். இந்தக் காரணத்தால் அந்தக் காலத்தைய ஆசிரியர்கள் மாணவர்களினதும் பெற்ருேர்களினதும் நண்பர்களாகவும், வழிகாட்டிகளாகவுமிருந்தனர்.

### ஆசிரிய - மாணவர் தொடர்பு

ஆனுல் இன்றைய சூழ்நிலையில் மக்கள் தொகை பன்மடங்கு அதிகரித்திருப்பதால் இந்த வசதியும், வாய்ப்பும் படிப்படியாக மறைந்து வருகிறது. ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் பெருந்தொகையான மாணவர்கள் இருப்பதால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே இருக்க வேண்டிய நெருங்கிய இணைப்பும் தொடர்பும் இல்லாமற் போகிறது. இதன் விளைவாக ஆசிரியர்

முன்பெல்லாம் ஆசிரிய, ஆசிரியைகள் தங்கள் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆனுல் அன்றிருந்த ஆர்வமும், அக்கறையும் இன்று படிப்படியாகக் குறைந்து வருவதை நான் காண்கிறேன்.

முன்பெல்லாம் ஆசிரியர்களுக்கு இப்போது கிடைப்பதுபோல் அதிக சம்பளம் கிடைக்கவில்லை; பதவி உயர்வுகள் கிடைப்பதற்கு இப்போதிருக்கும் வாய்ப்பு அப்போது இருக்கவில்லை; இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பயிற்சிபெற இப்போதிருக்கும் வசதிகூட அப்போது இருக்கவில்லை. ஆனுலும்கூட, இப்போதைய வாய்ப்புகளும் வசதிகளும், உரிமைகளும், போதிய சம்பளமும் இல்லாதிருந்தும்கூட, அன்று அவர்கள் முகங்களிலே தவழ்ந்த மகிழ்ச்சியை பாடசாலைகளின் வளர்ச்சியிலும், மாணவர்களினது முன்னேற்றத்திலும் அவர்கள் காட்டிய ஆர்வத்தையும், அக்கறையையும் இன்று காண முடியாதிருக்கிறது.

எந்த ஆசிரியரைப் பார்த்தாலும் ஒரு விரக்தி மனப்பான்மையோடு, கடமையிலே பற்றற்ற ஒரு நிலையில் வாழ்வதை நாம் பார்க்கிறேம். இதற்குக் காரணம் என்ன?

முன்பெல்லாம் ஆசிரியப் பெருமக்களை வெகுவாக மதித்து அவர்களுடைய கருத்துகளுக்கு [illegible] ன்றது. [illegible] இன்று ஆசிரியர்களை மனி

சமூககாவது சேவையாற்றுவோம் என்ற நம்பிக்கைஆசிரியர்களுக்கு ஏற்பட்டால் தான் ஆண்டாண்டு காலம் வழங்கிவரக்கூடிய பழக்க வழக்கங்களை சம்பிரதாயங்களை வளர்ப்பதிலே ஆசிரியர்கள் அக்கறை கொள்வார்கள். இடத்திற்கிடம் மாறும் 'நாடோடி'களாக ஆசிரியர்கள் வாழ்ந்தால் அதனுல் பாதிக்கப்படுவது ஆசிரியர்களல்ல—நாமும், நமது நாடும், நமது இளைய சந்ததியினரும்தான்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

இன்று நாட்டிலே படித்தவர்கள் மத்தியில் பட்டதாரிகள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு நாட்டில் நிலவுவதே ஆபத்தானது. படித்தவர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவது மிக ஆபத்தானது. தேசியப்பிரச்னையாக உருவெடுத்துள்ள இந்தப் பிரச்னைக்கு நாம் அனைவரும் ஒன்று கூடி முடிவெடுக்க வேண்டியது அவசியம்.

படித்தவர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை இரண்டு வழிகளில் தீர்க்க முயற்சிக்கம.

ஒன்று புதுப்புது வழிகளிலே வேலை தேட முயற்சிக்க வேண்டும். படித்துவிட்டோம் என்பதற்காக காரியாலயங்களில்வேலை கிடைத்தால்தான் செய்வோம் என்ற எண்ணத்தை உதறித் தள்ளிவிட வேண்டும். எந்த வேலையையும் முழு மனதுடன் செய்ய வேண்டும். எதையும் கெளரவக்குறைவான வேலை என்று எண்ணக் கூடாது. வேலையில்லாமல் இருப்பதுதான் கெளரவக் குறைவு சோம்பேறியாக இருப்பதுதான் கெளரவக் குறைவு சமுதாயத்துக்குப் பாரமாக இருப்பதுதான் கெளரவக்குறைவு! நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடத் தயாராகினுல் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தில்பாதி உடனே தீர்ந்துவிடும்.

இரண்டு நமதுகல்வித் திட்டத்திலும் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். வெறும் புத்தகப் பூச்சிகளை தயார் செய்யும் அடிப்படையில்லாமல் ஏதாவதொரு பிரயோசனமான வேலையைக் கற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை அளிக்கும் வகையில் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

(மிகுதி நாளை வரும்)

### விவேகானந்தசபை சாட்சியம்

திருகோணமலை, ஞாயிறு

## ரயிலிலிருந்து விழுந்த குழந்தை
### காயமின்றித் தப்பியது

நாவலப்பிட்டி, ஞாயிறு

சரோஜினி சௌந்தரராஜ் என்ற 18 மாதக் குழந்தை ஓடும் ரயிலிலிருந்து தவறி விழுந்து, ஒருகாயமுமின்றி தப்பிப்பிழைத்தது. அதிசயிக்கத்தக்க இந்தச்சம்பவம் நாவலபபிட்டி ரயில்நிலையத்துக்கருகாமையில்நடைபெற்றது. கதவுக்குப் பக்கத்தே நின்ற குழந்தை சரியாகக் கதவு பூட்டப்படாத காரணத்தால் திறபட்டுத்தவறி விழுந்தது. குழந்தையின் தந்தை அபாயச்சங்கிலியை இழுத்து புகையிரதத்தை நிறுத்திஞர். ரயிலில் இருந்தவர்களும் புகையிரத பாதுகாப்பதிகாரிகளும் விரைந்து சென்று குழந்தை விழுந்த இடத்தை அடைந்தபோது அங்கு கற்குவியலின்மேல் நெற்றியில் மாத்திரம்சிறிய காயத்துடன் காணப்பட்டது. நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று பரிசோதித்தபோது குழந்தைக்கு ஒருவித காயமுமில்லையென அறிவிக்கப்பட்டது. பிரயாணிகளின் கவலையீனத்திஞலேயேஇத்தகைய விபத்துகள் சம்பவிக்கின்றன என பாதுகாப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் 'டிரேட் அன் டிரான்ஸ்போர்டு' கம்பெனியின் தலைவராக முன்னுள்புகையிரதப்பகுதி ஜெனரல் மனேஜர் திரு. எம். கனகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளார். கம்பனியின் புதிய நிர்வாகிகள் சபை விரைவில் நிர்வாகத்தில் பல மாற்றங்கள் செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.

டிரேட் அன் டிரான்ஸ்போட்டு கம்பெனியின் வரு

## ஐயாறன் எழுதுவது

தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு பத்திரிகைக்காரர், 'ஈழநாடு' பிரதிநிதி வந்திருப்பதை அறிந்ததும், என்னிடம் ஆவலுடன் வந்து ''சார், இன்றைய 'ஈழநாடு' இருக்கிறதா?'' என்று கேட்டார். அவரது ஆவலைக் காண எனக்கே வியப்பாக இருந்தது. எதற்கு? என்று கேட்டதும் ''அவசியம் அதைப் பார்க்க வேண்டும். கச்சதீவு செய்தி விபரங்களை உங்கள் பத்திரிகை மிகச் சிறப்பாகவும், ருசியாகவும் வெளியிட்டிருந்தது'' என்று அவர் பல பத்திரிகைக்காரர்கள் முன்பாகக் கூறியபோது எனக்குப் பெருமையாக இருந்தது.

இந்தியாவிலிருந்து மாலையிலே கப்பலில் வந்த, பத்திரிகை நிருபர்கள், தலைமன்ஞரில் இறங்கியதும், அவசரமாக மன்ஞருக்குச் செல்லத் துடித்தனர். இலங்கையிலிருந்து ஏதாவது சாமான் வாங்கிச் செல்லவேண்டுமென்றே மன்ஞருக்குச் சென்றனர். போக்குவரத்து வசதி எதுவுமில்லை. இந்தியாவிலிருந்து வந்திருந்த அதிகாரிகளுள் சிலர் 'சர்க்யூட் பங்களா'வின் முன்பக்கம் கீழே மணலில் பல மணி நேரம் அமர்ந்திருந்தனர். தாகத்துக்குத் தேத்தண்ணீரும் அவர்களுக்குக் கொடுப்பாரில்லை. இரவு சுமார் 9 மணிக்கு ஒரு பஸ் வந்து நின்றது. அதில் அவசரமாக ஏறி மன்ஞருக்குச் சென்ருர்கள். பாவம் எப்படித் திரும்பிஞர்களோ தெரியவில்லை.

சென்னையிலிருந்து வந்திருந்த பத்திரிகைக்காரரை மன்ஞரில் என்ன வாங்கினீர்கள் என்று, மறுநாள் அதிகாலை கடற்கரையில் கண்டு கேட்டேன். அவர் மிகவும் கவலையுடன் இருந்தார். மன்ஞரில் திறந்திருந்த ஒரு கடையில், முகப்பவுடரும், பிஸ்கெட்டும் வாங்கியதாயும் தனது பாஸ்போர்ட் முதலியவை அடங்கிய பையை அந்தக் கடையிலேயே வைத்துவிட்டு மறந்து வந்துவிட்டதாகவும் அதை எப்படித் திரும்பிப் பெறுவதென்பது தெரியவில்லையென்றும் கவலைப்பட்டார்.

சென்னையில் முகப்பவுடரும், பிஸ்கெட்டும் இல்லையா? வரமுடியாத இலங்கைக்கு வந்த இடத்தில் இங்கிருந்து ஏதாவது வாங்கிச் சென்று, பெண்டுபிள்ளைகளுக்குப் பெருமையுடன் கொடுக்கவே அவற்றை

காரிகளும் கடைசி நேரத்தில் முடிவுசெய்தார்களாம். அதனுல் இலங்கையிலிருந்தும் பலர் இச்சமயத்தில் இந்தியக்கரை செல்ல ஆவலுடன் இருநதார்கள். இந்தச் 'சான்ஸ்' விட்டால் இப்படி மீண்டும் எப்போது கிடைக்கும்?

கொழும்பிலிருந்த பத்திரிகை நிருபரான கத்தோலிக்கஅன்பரொருவர் தனுஷ்கோடியிலிருந்து ராமேஸ்வரத்துக்கு எப்படிச் செல்வதென்று விசாரித்தார். ஏனென்று கேட்டதற்கு, ராமேஸ்வரம்கோவில் விபூதி பிரசாதமும், ஒரு முருகன் படமும் கல்யாணப்பரிசாக வேண்டுமென்று விவாகமாகப்போகும் தமது உறவினப் பெண் (இந்து) ஆவலுடன் கேட்டதாயும், அதற்காகவே அங்கு செல்ல விரும்புவதாயும் தெரிவித்தார். 20மைல் தூரத்துக்குள்ளிருக்கும் இடத்துக்குச் செல்ல எவ்வளவு தடைகள்! அண்டையிலுள்ள இரு நாட்டுப் பொதுமக்களுக்கும் யாத்திரைசெல்ல எவ்வளவு ஆவல்! இந்த அடிப்படை மனித உரிமையை இன்னும் எவ்வளவு காலம் மறுக்கப் போகின்றனரோ தெரியவில்லை!

தலைமன்ஞர் ரயில்வே ஸ்டேஷனிலும், கப்பல் துறையிலும் தாகத்துக்குக் குடிதண்ணீர் கிடையாது! முக்கியமான அந்த இடங்களில் பிரயாணிகள் பசியாற நல்ல ஓட்டல்களுமில்லை. இலங்கையைக் காண, இந்தியாவிலிருந்து மிக ஆவலுடன் வரும் யாத்திரீகர்கள் இங்கு வந்ததும், பெரும் ஏமாற்றமும், மனக்கசப்பும் அடைவதில் வியப்பில்லை. அதிகமான பிரயாணிகள் பிரயாணம் செய்வதால், உணவு, குடிதண்ணீர் இவற்றுக்குத் தலைமன்ஞரில் ஒழுங்கு செய்யவேண்டாமா? பல இந்திய ரயில்வே ஸ்டேஷன்களிலே குளிர்ச்சியான குடிதண்ணீர்ப் பெட்டிகளை வைத்து நல்ல வசதி செய்துள்ளனர். ஆனுல் கொழும்பு கோட்டை ஸ்டேஷனில்கூட அவ்வித ஏற்பாடில்லை. பண்டாரநாயக்கா சமாதியுள்ள இடத்தில் குளிர்ந்த நீர்ப் பெட்டியை நேருஜி அன்பளிப்பாக அளித்தார். தலைமன்ஞரிலே அவ்வித ஏற்பாட்டைச் செய்ய, இங்கு அரசாங்கத்துக்கோ, ரயில்வே அதிகாரிகளுக்கோ முடியாவிடில், இங்குள்ள தர்மவான்களாவது இதைச்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வராகவும், தலைசிறந்த ராஜதந்திரியாகவும் விளங்கி உலக மக்கள் அனைவரின் சுதந்திரத்தையும் மதித்த ஐஸனேவர் மறைந்துவிட்டார். அவரது மறைவு அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல, மனித சுதந்திரத்தை மதிக்கும் உலகமக்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

இராணுவத்தில் போர் வீரனாகவும் பின்னர் இரண்டாவது மகாயுத்தத்தில் நேசநாடுகளின் படைத்தளபதியாகவும் பணியாற்றி ஹிட்லரை யேற்றபின் நிறவெறியர்களுக்கெதிராக அவர் எடுத்த துணிச்சலான நடவடிக்கைகளும் திரு. ஐஸனேவரின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் நேர்மைக்கும், விசுவாசத்திற்கும் என்றும் நினைவுச் சின்னங்களாக விளங்கும். ஒருநாட்டுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே தலைமை தாங்கி வழிகாட்டக் கூடிய ஒரு சிறந்த தலைவர் அவர். அவரது மறைவினால் கவலையுறும் உலகத்துடன் நாமும்சேர்ந்து எமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

# ‘முன்னைய அரசுவந்திருந்தால் நாடு அழிந்திருக்குமாம்

— அமரசிறி எம். பி. கூறுகிறார்

பத்தேகம, ஞாயிறு

‘நாட்டு மக்களிடையே ஒற்றுமையின்மை நிலவினால் அந்நாடு ஒரு பொழுதும் அபிவிருத்தியடையாது. மக்கள் வேற்றுமைகளை மறந்து பொருளாதார சுதந்திரத்திற்காக ஒத்துழைத்து, ஒற்றுமையான இலங்கையை உருவாக்கவேண்டும், முன்னைய அரசாங்கம் இன, மத வெறுப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் தூண்டிவிட்டது. தற்செயலாக அந்த அரசாங்கம் பதவிக்கு வந்திருந்தால் நாடு அழிந்திருக்கும். தேசிய அரசாங்கமே தேசிய ஒற்றுமையை நாடு முழுவதற்கும் பெற்றுக் கொடுத்தது.’

இவ்வாறு ஹினிடுமா எம். பி. திரு. அமரசிறி கொணதெனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், மக்களைக் காப்பாற்றுவதே எங்களது கொள்கையாகும். இதை எந்தவிதமான எதிர்ப்புகளுக்குமிடையே நாங்கள் செய்வோம். நாட்டைக் காப்பாற்றிய விவசாயிகளுக்கு நாடு பெரிதும் கடமைப்பட்டுள்ளது’ எனக் கூறினார்.

# கோவிலுக்கருகில் செத்துக்கிடந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

தனது மரணத்திலும்கூட ஆண்டவன் அனுக்கிரகத்தை வேண்டிய ஒருவர் ஆண்டவன் சந்நிதானத்துக்கு அருகிலேயே தனது வாழ்வை முடித்துக்கொண்டார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

நேற்று முந்தினம் கோட்டை முனியப்பர் கோயிலுக்கு அருகாமையில் இறந்துகிடந்த இவருக்கு அருகில் திராவகப் போத்தல் ஒன்றும், சோப்பை ஒன்றும் கிடக்க காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மனைவி யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் கடமையாற்றுவதாகவும், இறந்தவருக்கு வேலை எதுவும் இல்லையென்றும், இறந்தவரது சகோதரனும், தாயும் அண்மையில் இறந்ததிலிருந்து இவர் வாழ்க்கையில் விரக்தி கொண்டு காணப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரிதிரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

(கா. நி.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பாடசாலையில் ஒரே வகுப்பில் பெருந்தொகையான மாணவர்கள் இருப்பதால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே இருக்க வேண்டிய நெருங்கிய இணைப்பும் தொடர்பும் இல்லாமற் போகிறது. இதன் விளைவாக ஆசிரியர்களின் பொறுப்பு அதிகரிக்கிறது. வேலைப்பளு பன்மடங்காகிறது. இறுதியாக தனது முழுத் திறமையையும் பயன்படுத்த முடியாத நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுகிறார்கள். இதனால் மாணவர் சமுதாயம் மட்டுமல்லாது நாடும், நாமும் பாதிக்கப்படுகிறோம்.

வாழ்வதை நாம் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

முன்பெல்லாம் ஆசிரியப் பெருமக்களை வெகுவாக மதித்து அவர்களுடைய கருத்துகளுக்கு ஆக்கம் தர முன்னின்றது. சமூகம் ஆனால் இன்று ஆசிரியர்களை மனிதர்களாகவே கருதுகின்றார்கள் இல்லை. ஏதோ பகடைக் காய்களாக நினைத்த நேரத்தில் நினைத்தபிரகாரம்இடத்திற்கிடம் மாற்றப்படும் அலைக்கழிக்கப்படும் அவலமான நிலையிலேயே இன்றைய ஆசிரிய சமுதாயம் இருக்கின்றபடியால், பழைய மகிழ்ச்சியையும் சேவா உணர்ச்சியையும் அவர்களிடத்திலே காணமுடியாதிருக்கிறது. எதிர் காலத்தைப் பற்றிய எந்தவிதமான நிச்சயமுமற்ற நிலையில் அடுத்த ஆண்டு எந்தப் பாடசாலையில் இருப்போம்? அடுத்த மாதம் நாட்டின் எந்த மூலைக்குத் தள்ளப்படுவோம் என்ற எண்ணத்திலேயே அவர்கள் இருக்கின்றபடியால் அவர்கள் மனம் தாங்கள் படிப்பிக்கின்ற பாடசாலை அலுவல்களிலே வேரூன்ற மறுக்கிறது.

— டாக்டர் ஜி. பி. மலலசேகரா —

மாறுபட்ட காலத்திற்கு ஏற்ப-சூழ்நிலைக்கு ஒவ்வா பெற்றோர்களும் பாடசாலை வளர்ச்சியிலே பிள்ளைகளின் கல்வியிலே கூடிய அக்கறை எடுத்தார்களேயானால் இந்தப் பாதிப்பு ஓரளவு குறையக்கூடும். ஆனால் இன்றைய பெற்றோர்களில் பெரும்பாலானோர் பாடசாலைகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைப்பதுடன் அவர்களுக்குத் தேவையான ஆடைகளையும், புத்தகங்களையும் வாங்கிக் கொடுப்பதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதித் திருப்தியடைந்துவிடுகின்றனர். இந்தப் பிழையான எண்ணம் விரைவில் மாற்றப்படவேண்டும்.

## பெற்றோரின் பொறுப்பு

எந்த ஒரு மாணவனும் பாடசாலையில் சில மணித்தியாலங்களையே கழிக்கிறான். ஒரு நாளில் பெரும்பகுதியை தனது பெற்றோர்களுடனும், உறவினர்களுடனும், நண்பர்களுடனுமே கழிக்கிறான். எனவே பாடசாலைகளில் பெரும் கல்வியைவிட வெளிஉலகில் தனது பெற்றோர்களுடனும் உற்றார் உறவினர்களுடனும், தோழர்களுடனும் பழகும்போது பெறும் அனுபவபூர்வமாக கல்விதான் அவனது ஒழுக்கமான நடத்தைக்கும், அறிவு வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றன. எனவே பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தங்கள் பிள்ளைகள் எந்தச் சூழலில் வளர்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற சாதக, பாதகங்களைப் பற்றி பெற்றோர் அதிக அக்கறை காட்டவேண்டும். நமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வுப்பாதை செம்மையாக அமைய பெற்றோர் - ஆசிரியர் ஒத்துழைப்பு மிக மிக அத்தியாவசியம்.

## பாடசாலைகளில் மனம் வேரூன்ற

ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் ஆசிரியர்களுக்கும் அவர்களது பாடசாலைகளுக்கும் இடையில் நெருங்கிய பிணைப்பும் இணைப்பும்ஏற்படுவதிலும் இருக்கிறது. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு பாரம்பரியம் உண்டு ஒரு மாணவன் பரீட்சைகளில் சித்தியடைந்தவனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனது நடைமுறைப்பழக்கவழக்கங்களைக் கொண்டு அவன் பெரியவர்களிடமும், பெற்றோர்களிடமும் நடந்துகொள்ளும் முறையை அவதானித்து அவன் இன்ன பாடசாலையில்தான் பயின்றிருப்பான் என்று ஓரளவு திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியும். பாரம்பரியமான சில வழக்கங்களை சில கல்லூரிகள் ஏற்படுத்தி வந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அக்கல்லூரிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அந்தக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பாரம்பரியமான புகழையும் பெருமையையும் காப்பாற்றுவதில் எடுத்துள்ள தளராத முயற்சிதான்.

குறிப்பிட்ட பாடசாலையிலே குறிப்பிட்ட கல்லூரியிலே நிலையாக பல வருடங்

லாத் திண்டாட்டத்திலபாதி உடனே தீர்ந்துவிடும்.

இரண்டு நமதுகல்வித் திட்டத்திலும் அடிப்படையான

## விவேகானந்தசபை சாட்சியம்

திருகோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை கோணேசராலயப் பகுதியை புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டுமென கொழும்பு விவேகானந்த சபை திருக்கோணமலை குழுவுக்குக் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து சபைப் பிரதிநிதிகள் திருவாளர்கள் இரா சபாநாயகம் கோ. ஆழ்வாப்பிள்ளை, தி. மாணிக்கவாசகர், மு. சிவராசா ஆகியோர் மேற்படி குழுவினர் சாட்சியமளித்தனர். புராதன இதிகாசக் காலங்களிலிருந்தே கோணேஸ்வரம் பிரசித்தி பெற்ற சைவ ஆலயம் எனவும் சரித்திரவாயிலாக பார்க்கில் எப்படியும் 7-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப்பட்டமை அவர்கள் காலத்துக்கு முன்பிருந்தே மிகச்சிறந்த சிவத்தலமாய் விளங்கியமைக்கு போதிய சான்றுபகரும்என்பதையும் சபைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கோயில் போத்துக்கீசரால் இடிக்கப்பட்டதையும் இடிக்கப்பட்ட கற்களைக் கொண்டு கோட்டைகட்டப்பட்டதையும் அவற்றை உறுதிப் படுத்துவனவாக உள்ள கற்களும் மீன் இலச்சினைகள் பொறித்த கற்களும் இன்னமும் உண்டு என கூறியபோது அவ்விடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்துவதில் ஏதாவது ‘ஆட்சேபனை உண்டா’என உறுப்பினர் வினவியதற்கு ஆட்சேபனை இல்லை எனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பிரட்டரிக் கோட்டைப் பகுதியை வரைபடம் ஒன்றின்மூலம் குறிப்பிட்ட சில இடங்களை விளக்கிய பிரதிநிதிகள் கோட்டைப் பிரதேசம் முழுவதிலும் ஆலயம் சம்பந்தப்பட்ட விஸ்தரிப்புகளை தவிர வியாபார குடியிருப்பு சம்பந்தமான எவ்வித புதிய கட்டிடமும் எழ அனுமதிக்கக் கூடாதெனவும் தற்போதைக் கு கோயில் உள்ளபகுதி அருள்மலைப்பகுதி, முன்னாள் மகாவிஷ்ணு ஆலயம் இருந்த பகுதி, பாபநாசத் திர்த்தம் உள்ளபகுதி ஆகியன வற்றைப் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தினால் பின்னர் அதன் நிர்வாகம் சாங்க சட்டமுறைகளுக்கு ஏற்ப இருக்கலாம் என்ற அபிப்பிராயத்தையும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ரல் மனேஜர் திரு. எம். கனகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளார். கம்பனியின் புதிய நிர்வாகிகள் சபை விரைவில் நிர்வாகத்தில் பல மாற்றங்கள் செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.

டிரேட் அன் டிரான்ஸ்போட்டு கம்பெனியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம்நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் சபையில் கீழ்க்காணுவோர் இடம்பெற்றுள்ளனர். திருவாளர்கள் எம். கனகசபை, பி. இராஜசேகரம், என். கே. நல்லதம்பி, பி. ஏ. ஜோசப், எஸ். தங்கவடிவேலு. காரியதரிசி திரு. என். குமாரசாமி.

## இசைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை இசைத்தமிழ் நிலயத்தினரின் ஆதரவில் நடைபெறும் இசைவிழா வருகிற 3-ம் 4-ம் 5-ம் திகதிகளில் உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

முதல் நாள் நிகழ்ச்சியில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு. எஸ். செல்வநாயகமும், 3-ம் நாள் நிகழ்ச்சியில் டாக்டர் எஸ், இராசசூரியர், திரு. டென்னிஸ் கட்ஸமன் அமெரிக்கா சமாதானத்தொண்டர் ஆகியோரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்கள்.

3-ம் நாள் கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## சைக்கிளுடன் சிறுவன் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

களவாடிய சைக்கிளுடன் கைது செய்யப்பட்டான் 12 வயதுச் சிறுவன் ஒருவன் இச் சம்பவம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் தேவாயத்துக் கருகாமையில் நடைபெற்றது.

கொக்குவிலைச் சேர்ந்த சபாரத்தினம் தேவதாஸ் என்ற சிறுவனே இவ்வாறு கரையூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட சிறுவன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் சிறுவர் பாதுகாப்பு பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(கா. நி)

டார்.

சென்னையில் முகப்பவுடரும், பிஸ்கெட்டும் இல்லையா? வரமுடியாத இலங்கைக்கு வந்த இடத்தில் இங்கிருந்து ஏதாவது வாங்கிச் சென்று, பெண்டுபிள்ளைகளுக்குப் பெருமையுடன் கொடுகவே அவற்றை இங்கு வாங்கியிருக்கவேண்டும். இந்தியாப் பணத்தை மன்னார்கடைகளில் தாராளமாக வாங்கிக்கொள்கிறார்களாம்.

இலங்கை-இந்தியா பிரயாணத்துக்குச் சாதாரணமாக பாஸ்போர்ட், விஸா, செலாவணி, ஊசி குத்தல் பத்திரம் எல்லாம் வேண்டும். ஆனால் இந்த நீச்சல் போட்டி காரணமாக, இருதரப்பையும் சேர்ந்தவர்களை இவ்வித நிபந்தனை எதுவுமில்லாமல் யாத்திரைசெய்யலாமென்று, இருதரப்பு அதி

யங்கா சமாதியுள்ள இடத்தில் குளிர்ந்த நீர்ப் பெட்டியை நேருஜி அன்பளிப்பாக அளித்தார். தலைமன்னாரிலே அவ்வித ஏற்பாட்டைச் செய்ய, இங்கு அரசாங்கத்துக்கோ, ரயில்வே அதிகாரிகளுக்கோ முடியாவிடில், இங்குள்ள தர்மவான்களாவது இதைச் செய்யலாம். நல்ல புண்ணியமாக இருக்கும்!

(தொடரும்)

0 0

கரும்பினு மினியான்தன்னைக் காய்கதிர்ச்சோதியானை
இருங்கடல் அமுதந்தன்னை இறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவரேற்றும்
அரும்பொனை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

--அப்பர் அடிகள்

# ‘சிங்கள மாணவர்கள் ஆங்கில அறிவில் குறைவு’

— கல்வி அமைச்சர்

## ‘சிங்களவர் அல்லாத பலர் உத்தியோகம் வகிக்கிறார்கள்’

--- பன்னதாசி தேரோ

காலி, ஞாயிறு

‘இன்றைய மாணவர்கள் ஆங்கில அறிவு மிகக்குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். முன்னணியில் உள்ள பெரிய பாடசாலைகளில்கூட மாணவர்கள் சரியான வழியில் ஆங்கிலக்கல்வியைப் பெறுவதில்லை. குறிப்பாக சிங்கள மாணவர்களின் ஆங்கிலக் கல்வியறிவு வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலை ஏற்படின் வருங்காலத்தில் நாம் வெளிநாடுகளில் இருந்து ஆங்கில ஆசிரியர்களைத் தருவிக்கவேண்டிய நிலையேற்படும்.’

காலி சரணதிஸ வித்தியாலய பரிசளிப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயக்கா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தவிழாவில் கலந்துகொண்ட் வண. பன்னதாசி தேரோ பேசுகையில் ‘மாணவர்களின் வருங்காலம் வளமுடையதாகஅமைய அவர்களுக்கு ஆங்கிலக் கல்வியோடு தமிழும் கற்பிக்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் சிங்களம் மாத்திரம் கற்றவர்கள் வேலையில்லாது கஷ்டப்பட, அரசாங்க உத்தியோகங்கள் யாவற்றையும் ஆங்கிலமும தமிழும் கற்றவர்களே பெறுவார்கள்’ எனக் கூறினார்.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து சிங்களமக்கள் தங்கள் உரிமைகளை இழந்துள்ளார்கள் என்று கூறிய அவர் சிங்களவர் அலாதோர் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் தெற்குறோமன் கத்தோலிக்க பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் இன்று மாலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசையர்

ஊரெழுவைச் சேர்ந்த வே. சிவஞான ஐயர் (சோதிடர்) அவர்களின் மகன் காத்திகேசையர் 30-3-69-ல் சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை காலை 12 மணிக்கு கொத்தியாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும் தகவல்: வே. சிவஞானஐயர் சோதிடர் ஊரெழு. 550